ஜூலை 2020
விலை ரூ. 20/–

மலர் : 51 இதழ் : 1

தமிழரசு

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

50 தமிழரசு 1970-2020 பொன்விழா ஆண்டு

நன்றிகளை உரித்தாக்குகிறோம்

"தமிழரசு" தனது 50ஆவது ஆண்டினை நிறைவுசெய்து, 51ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில் சந்தாதாரர்கள், வாசகர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், சான்றோர்கள், எழுத்தாளர்கள், துறை சார்ந்த சாதனைகளை தொடர்ந்து வழங்கிவரும் அரசு அலுவலர்கள், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகத்தில் தங்களுடைய சீரிய பணியினை வழங்கிய முன்னாள் அலுவலர்கள், தொழில்நுட்புனர்கள், பணியாளர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றிகள் பல கூறி பெருமை கொள்கிறோம்.

தமிழரசு

01.07.2020

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : ஆனி – ஆடி
ஜூலை 2020
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 1

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
முனைவர் **இரா. பாஸ்கரன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

மாண்புமிகு அம்மாவுடைய அரசு கடும் சோதனையான நேரத்திலும், குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் மற்றும் பெருந்தொழில்கள், எவ்விதத்திலும் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

★ **மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அதனை துரிதமாக நிறைவேற்றி, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.06.2020 அன்று, ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திருவாச்சியில் நடைபெற்றுவரும் அத்திக்கடவு–அவிநாசி திட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்த பின் ஆற்றிய உரை) 5

★ **தொழில் புரிபவர்களுக்கு தேவையான உதவிகளை முழுமையாக செய்ய அரசு தயாராக உள்ளது**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை)........ 28

★ **கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிருமிநாசினி தெளித்திட 50 துரித செயல் வாகனங்கள்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கிருமிநாசினி தெளித்திட 50 துரித செயல் வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்) 35

★ **ஆவின் நிறுவனத்தின் சார்பில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் மோர், சாக்கோ லெஸ்ஸி, மேங்கோ லெஸ்ஸி நீண்ட நாட்கள் கெடாத சமன்படுத்தப்பட்ட பால் மற்றும் ஆவின் டீ மேட் பால் ஆகிய 5 புதிய பொருட்கள் அறிமுகம்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஆவின் நிறுவனத்தின் சார்பில் அறிமுகம் செய்து வைத்தார்கள்). 40

மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அதனை துரிதமாக நிறைவேற்றி, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
25.06.2020 அன்று, ஈரோடு மாவட்டம்,
பெருந்துறை வட்டம், திருவாச்சியில் நடைபெற்றுவரும்
அத்திக்கடவு–அவிநாசி திட்டப் பணிகளைப்
பார்வையிட்டு ஆய்வு செய்த பின் ஆற்றிய உரை

அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்திக்கடவு–அவிநாசி திட்டம் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய 3 மாவட்டங்கள் பயன்பெறுகின்ற விதமாக இந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த 3 மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் கடந்த 50 ஆண்டுகாலமாக அரசுக்கு கோரிக்கை வைத்து வந்தார்கள். 50 ஆண்டுகால கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோதே அத்திக்கடவு–அவிநாசி திட்டம் நிறைவேற்றப்படுமென்று அறிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு அம்மாவினுடைய அரசு, அம்மா அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற விதமாக, 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தை மாநில அரசின் நிதியிலிருந்தே செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பை வழங்கி, ஒப்பந்தம் விடப்பட்டு, அந்தப் பணி துரிதமாக இரவு, பகல் பாராமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தினால் சுமார் 24,500 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இதில், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள், 32 பொதுப்பணித் துறை ஏரிகள், 970 குளங்கள் ஆகியவற்றில் நீர் நிரப்பப்பட்டு, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைக்கவும், குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கவும் இந்தத் திட்டம் பேருதவியாக இருக்கும்.

இந்தத் திட்டம் 2021 டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று கால அளவு நிர்ணயிக்கப்பட்டு, அந்தப் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 6 நீரேற்று மின் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அம்மாவினுடைய அரசு

எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அதனை துரிதமாக நிறைவேற்றி, மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருகின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை எங்களுடைய அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மூன்றாண்டு காலத் திட்டமாக பருவகாலங்களில் பொழிகின்ற மழைநீர் முழுவதையும் தேக்கி வைக்க வேண்டுமென்பதற்காக தடுப்பணைகள் கட்டுவதற்கு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தமிழகம் முழுவதும் தடுப்பணைகள் கட்ட இருக்கிறோம். பவானி ஆற்றில் மட்டும் 5 இடங்களில் தடுப்பணைகள் கட்டவிருக்கிறோம். ஜம்பை என்ற இடத்தில் ஒரு தடுப்பணை கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்து, அந்தப் பணிகள் துவங்க இருக்கின்றன. மழைக்காலங்களில் பொழிகின்ற மழைநீர் உபரியாக வெளியில் சென்று வீணாகின்றது. அப்படிப்பட்ட நீரை ஆங்காங்கே தேக்கி வைத்து நிலத்தடி நீர் உயர்வதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

விவசாயிகளின் கனவுத் திட்டம் குடிமராமத்துத் திட்டம். இத்திட்டத்திற்காக சுமார் 1,400 கோடி ரூபாய் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 6,000க்கும் மேற்பட்ட பொதுப்பணித் துறையின் கீழ் வருகின்ற ஏரிகளை எடுத்து, முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இதற்கு டெண்டர் விடுவது கிடையாது. விவசாயிகள் சங்கம், விவசாயிகளின் பிரதிநிதிகள், அந்தப் பாசன ஏரிக்குட்பட்ட ஆயக்கட்டுக்காரர்களை வைத்துத்தான் இந்தப் பணிகளை துவக்குகின்றோம். ஏரிகளை தூர்வாருவதன் மூலமாக அள்ளப்படும் வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாகப் பயன்படுகிறது, ஏரிகளும் ஆழமாகிறது. பெய்த மழைநீர் தேங்கி விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் நீர் கிடைக்கின்றது. இந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, விவசாயிகள் பயன்பெறுகின்ற விதத்தில் நிலத்தடிநீர் செறிவூட்டப்படும். இந்தத் திட்டத்தின் வாயிலாக குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவையெல்லாம் விவசாயிகளின் நன்மைக்காக அம்மாவினுடைய அரசு கொண்டு வந்த திட்டமென்று இந்த நேரத்தில் பெரு மகிழ்ச்சியோடு உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகளுக்கு உபதொழிலாக இருக்கும் கால்நடைத் தொழில் மேலும் சிறக்க அம்மாவினுடைய அரசு தலைவாசல் கூட்டு ரோட்டில் கால்நடைப் பூங்கா என்ற மிகப்பெரிய திட்டத்தை உருவாக்கியுள்ளது. ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் அந்தத் திட்டம் நிறைவேற இருக்கிறது. ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை ஆராய்ச்சி நிலையம், கால்நடைப் பூங்கா அமைக்கவிருக்கிறோம். நம்முடைய விவசாயிகள்

வளர்க்கின்ற ஒரு பசு சுமார் 10 லிட்டர் பால் கறந்தால், இந்தக் கால்நடைப் பூங்காவில், நம்முடைய சீதோஷ்ண நிலைக்கேற்ற கலப்பினப் பசுக்களை உருவாக்கி, அதன் மூலம், சுமார் 25 லிட்டர் பால் கறப்பதற்கான நிலையை உருவாக்கித் தரவிருக்கிறோம். அந்தப் பணிகள் தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகிறது.

அதேபோல, விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்கடனாக சுமார் 11 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்துள்ளோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை விற்பனை செய்வதற்காக மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து 10 மாவட்டங்களில் தலா ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் மார்க்கெட் அமைக்கவிருக்கிறோம். அந்தப் பணிகள் விரைவில் தொடங்க இருக்கிறது.

அதேபோல, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் மானிய விலையில் டிராக்டர் வழங்குகிறோம். விவசாயிகள் உழவு செய்வதற்குத் தேவையான வேளாண் கருவிகள் குறைந்த வாடகையில் கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். தென்னை வளர்க்கின்ற விவசாயிகள், வெள்ளை ஈயால் தென்னை பாதிக்கப்படுவதாகவும், வெள்ளை ஈயை ஒழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கை வைத்ததை ஏற்று, அம்மாவின் அரசு நிதி ஒதுக்கீடு செய்து வெள்ளை ஈயை ஒழிப்பதற்குண்டான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

கடந்த ஆண்டு மக்காச்சோளப் பயிரிட்டு, அமெரிக்கன் படைப்புழுவினால் கடுமையான பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு ரூபாய் 186 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கியுள்ளோம். இந்த ஆண்டும் அமெரிக்கன் படைப்புழுவினால் மக்காச்சோளப் பயிர் பாதிக்கப்பட்டுள்ளதை விவசாயிகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள். உடனடியாக, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளரை அனுப்பி, பார்வையிட்டு, பாதிப்பைக் கண்டறிந்து, அதற்காக ரூபாய் 49 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட அனைத்து மக்காச்சோளப் பயிர்களுக்கும் அரசாங்கமே பூச்சி மருந்து தெளித்து அந்த நோயைக் கட்டுப்படுத்தியுள்ளோம். இதனால் விவசாயிகள், 95 சதவிகிதம் விளைச்சல் பெற்றுள்ளார்கள்.

அதேபோல, காற்றினால், வாழைமரம் உடைந்து பாதிப்படைந்தால், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், இழப்பீடு தருகிறோம். டெல்டா பகுதிகளில் அரசு கொள்முதல் நிலையங்களில் ஒவ்வொரு ஆண்டும் 23 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கு மேல் நெல் கொள்முதல் செய்தது கிடையாது. ஆனால், அதைவிட அதிகமாக இந்த ஆண்டு 24 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 3 இலட்சம் மெட்ரிக் டன் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்பின், ஏறத்தாழ 27 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து வரலாற்று சாதனை படைத்த அரசாக அம்மா அரசு திகழும். விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டதால் விவசாயிகள் உரிய நேரத்தில் பயிர் செய்து நல்ல விளைச்சலை பெற்றுள்ளனர்.

சரியான முறையில் தூர்வாரிய காரணத்தினால் டெல்டா பகுதிகளின் கடைமடைப் பகுதிகளுக்கு குறிப்பிட்ட காலத்தில் தண்ணீர் போய்ச் சேர்ந்துள்ளது. மேலும், டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்த அரசு அம்மாவின் அரசு. இவ்வாறு பல்வேறு சாதனைகளை விவசாயிகளுக்காக செய்த அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைவருக்கும் நன்றி, வணக்கம்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

கீரையில் உள்ள வைட்டமின்கள், இரும்புச்சத்து உள்ளிட்டவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும். குறிப்பாக அகத்திக்கீரை, முருங்கைக்கீரை அவசியம்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

க்ரீன் டீ குடிக்கலாம். இஞ்சியையும், எலுமிச்சையையும் துண்டாக்கி வெந்நீரில் கொதிக்க வைத்து, சர்க்கரைக்கு பதிலாக வெல்லம், நாட்டு சர்க்கரை, தேன், கருப்பட்டி சேர்த்து குடிக்கலாம்.

8 திட்டங்கள் மூலம் ரூ.10,399 கோடி முதலீடுகள் மற்றும் 13,507 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் முன்னிலையில் 20.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், தமிழ்நாட்டில் தொழில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 20.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, கோயம்புத்தூர், விழுப்புரம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 8 தொழில் நிறுவனங்கள் தங்கள் புதிய முதலீட்டு திட்டங்களை 10,399 கோடி ரூபாய் முதலீட்டில் தமிழ்நாட்டில் தொழில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 13,507 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்திடவும், தொழில்துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழச் செய்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மேலும், புதிய முதலீடுகளை ஈர்க்க தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு அமைத்தது, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்திட ஏற்படுத்தப்பட்ட நாடுகளுக்கான அமைவுகள்,

அனுமதிகளை உடனுக்குடன் வழங்க ஒற்றைச் சாளர முறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு என பல வழிமுறைகள் ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

தமிழ்நாட்டை தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து செயல்படுத்திய இது போன்ற பல திட்டங்களின் விளைவாகவும், தமிழ்நாட்டில் நிலவும் சிறப்பான தொழில் சூழலின் விளைவாகவும் தொடர்ந்து பல புதிய தொழில் முதலீட்டுத் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மும்பையைச் சேர்ந்த, 'ப்ராஜெக்ட்ஸ் டுடே' (Projects Today) என்ற நிறுவனம், கோவிட் – 19 காலத்திலும், அதாவது கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்களில், அகில இந்திய அளவில் அதிகமான முதலீடுகளை ஈர்த்ததன் மூலம், தமிழ்நாடு, மஹாராஷ்டிரா மாநிலத்தினை பின்னுக்குத் தள்ளி, முதலிடத்தினைப் பிடித்துள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

27.05.2020 அன்று, தொழில்துறை சார்பில், ஜெர்மனி, ஃபின்லாந்து, தைவான், பிரான்ஸ், கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 8 புதிய தொழில் திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. தற்போது நிலவிவரும் சூழ்நிலையின் காரணமாக, இந்த 8 திட்டங்களில், 5 திட்டங்களுக்கு நேரடியாகவும், 3 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இத்திட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு:–

1. காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் உள்ள இண்டோஸ்பேஸ் தொழிற் பூங்காவில், Vikram Solar நிறுவனம், 5,423 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 7,542 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Solar Cells & Modules உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இதுவரை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த Solar Cells மற்றும் Modules, இத்திட்டத்தின் மூலமாக தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட உள்ளன.

2. காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 1,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், CGD Sathrai Pvt. Limited நிறுவனத்தின், தொழிற்பூங்கா திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

3. கோயம்புத்தூர் மாவட்டத்தில், 200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Aquasub நிறுவனத்தின் Ductile Iron Foundry திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

4. இராணிப்பேட்டை மாவட்டத்தில், 200 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், NDR Infrastructure நிறுவனம், 125 ஏக்கர் பரப்பளவில் அமைக்க உள்ள தொழிற் பூங்கா திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

5. விழுப்புரம் மாவட்டம், மரக்காணத்தில் 36 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 465 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், GI Agro Tech நிறுவனத்தின் முந்திரி பதப்படுத்தும் (Cashewnut Processing) திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

6. செங்கல்பட்டு மாவட்டம், சிங்கபெருமாள் கோவில் – ஒரகடம் நெடுஞ்சாலையில், 4,000 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Hiranandani குழுமத்தை சேர்ந்த Yotta நிறுவனத்தின் தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

7. கோயம்புத்தூர் மாவட்டத்தில், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ELGI Equipments நிறுவனத்தின் Air Compressors உற்பத்தி புரிந்துணர்வு ஒப்பந்தம்.

8. ஈரோடு மாவட்டம், சிப்காட் பெருந்துறை தொழிற்பூங்காவில், 40 கோடி ரூபாய் முதலீட்டில், JS Auto Cast நிறுவனத்தின் Foundry விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

என மொத்தம், 8 திட்டங்களின் மூலம் 10,399 கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் சுமார் 13,507 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

ரூ.166 கோடி மதிப்பீட்டில் பில்லூர் மூன்றாம் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.06.2020 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பில்லூர் மூன்றாம் கூட்டுக் குடிநீர் அபிவிருத்தித் திட்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சுரங்கப்பாதை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் 72 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள். உடன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி
அவர்கள் தலைமையில், 25.06.2020 அன்று, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள், கொரோனா நோய்த் தொற்று தடுப்புப் பணிகள் மற்றும் அத்திக்கடவு – அவிநாசி நீரேற்றும் திட்டப்பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

அனைவருக்கும் வணக்கம்.

கோவை மாவட்டத்தில் கொரோனோ வைரஸ் தொற்று நோய், அரசின் வழிகாட்டுதல்களின்படி, எந்தளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். சென்னைக்கு அடுத்து, கோவைதான் மருத்துவ சிகிச்சை அளிக்கும் விதத்தில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. அதிகமான மருத்துவமனைகள் உள்ள மாவட்டம் கோவை மாவட்டம். உயர்தர சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவமனைகளைக் கொண்டதும் கோவை மாவட்டம் தான்.

அதனடிப்படையில், கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக 10 பரிசோதனை ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். தனியார் மற்றும் அரசு சார்பாக நாள் ஒன்றுக்கு 2,000 நபர்களுக்கு பரிசோதனை செய்யப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கின்றார். இதுவரை, சுமார் 37,095 நபர்களுக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு, அவர்களில் கொரோனா வைரஸ் சோதனையின் மூலமாக பாசிடிவ் உள்ளவர்கள் பூரண குணமடைவதற்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளித்து, 219 நபர்கள்தான் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்ற விவரத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதோடு, அரசு மற்றும் தனியார் சார்பாக சுமார் 3,026 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். கொரோனா வைரஸ் தடுப்புப் பணியில் கோவை மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில், அரசு அறிவித்த திட்டங்கள் முழுவதும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

முன்னணியில் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. மாவட்ட நிருவாகம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கோவை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது.

அதேபோல, கோவை மாவட்டத்தில் நடைபெறுகின்ற திட்டங்கள், மேற்கொள்ளப்பட்ட பணிகள், மேற்கொள்ளவிருக்கிற பணிகள் குறித்தும், மாநகராட்சி, பொதுப்பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக நடைபெறுகின்ற பணிகள் குறித்தும் விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பாக கோவை மாநகர மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்குவதற்காக 3ஆவது குடிநீர் திட்டத்தை அமல்படுத்துவதற்கு முதற்கட்டமாக 166 கோடி ரூபாயில் பில்லூரில் சுரங்கப்பாதை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டிருக்கிறது. நில எடுப்புப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு, குறித்த காலத்தில் கோவை மாநகர மக்களுக்கு நிலையான தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். எல்.இ.டி. விளக்குகளாக முழுவதும் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் மின் தேவை குறைந்திருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக பல்வேறு பணிகள் நடைபெறுகின்றன. சேலத்தை விட அதிகமான பாலப் பணிகள் கோவை மாவட்டத்தில் தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை புள்ளி விவரங்களோடு நான் சொல்கிறேன். மேலும், கோவை மாநகரத்தில் அதிக நீளமுள்ள பாலங்கள் கட்டுவதற்கு விரைவில் டெண்டர் விடப்படும்.

கோவை மாவட்டம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக இருப்பதினாலும், போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதைச் சுட்டிக்காட்டிய காரணத்தினாலும், போக்குவரத்து நெரிசல் இல்லாத ஒரு மாநகரமாக உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மாவினுடைய அரசால், இவ்வளவு பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதேபோல, நவீன பேருந்து நிலையத்திற்கும் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. சேலம்–கோவை மாநகரத்திற்குள் அதிக வாகனங்கள் வருவதை தவிர்ப்பதற்காக மேற்குப் புறவழிச் சாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. தமிழகத்திலேயே அதிகமான பணிகள் நடைபெறுகின்ற மாவட்டம் கோவை மாவட்டம் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப்பணித் துறை, குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, குடிசை மாற்று வாரியம் என அனைத்துத் துறைகளிலும் பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாவட்டம் கோவை மாவட்டம் தான் என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாவட்டம் டெக்ஸ்டைல், விவசாயம் என அனைத்து வளங்களும் நிறைந்த ஒரே மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இங்கே அதிகமானவர்கள் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு அனைத்து வளங்களும் பெற்ற கோவை மாவட்டத்திற்கு, அம்மாவின் அரசால், அனைத்துத் துறைகளிலும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கேயுள்ள நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகள் முழுவதையும் நிறைவேற்றுகின்ற நிலையில் அம்மாவினுடைய அரசு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்திற்குத்தான் அதிகமான நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். அதிகமான கல்லூரிகள் அமைப்பதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு மாவட்டம் என்று சொன்னால் அது கோவை மாவட்டம் தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். அம்மாவின் அரசைப் பொறுத்தவரை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல அனைத்துப் பணிகளும் தொடங்கப்பட்டு, சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசு அறிவித்த திட்டங்கள் முழுவதும் சிறப்பான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, கோவை மாவட்ட நிருவாகத்திற்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் இந்த மாவட்டத்தில் பணிபுரிகின்ற அனைத்துத் துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் மனமார, உளமார பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.06.2020 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், குடிமராமத்து திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தில் தூர்வாரப்பட்ட ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகள் குறித்த பணி விளக்க கையேட்டினை வெளியிட, மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்கள் பெற்றுக்கொண்டார். உடன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன், கோயம்புத்தூர் மவாட்ட ஆட்சித்தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ்த்தாய் வாழ்த்து பாட ஆரம்பித்து 50 ஆண்டுகள் நிறைவடைந்தது

1891ஆம் ஆண்டில் திரு. பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணியம் என்ற நாடகத்தை இயற்றினார். அந்நாடகத்தில் வரும் "நீராரும் கடலுடுத்த" என்ற வரிகள் அமைந்த பாடலை தமிழ்த்தாய் வாழ்த்து பாடலாக ஏற்று, தமிழ்நாடு அரசு 1970 ஜூன் 17ஆம் தேதி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்த்தாய் வாழ்த்தானது அரசு விழாக்களின் தொடக்கத்தில் பாட வேண்டும் என்றும், அதேபோல் அரசுப் பள்ளிகளிலும் அன்றைய தினத்தை தொடங்கும்முன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன்தான் தொடங்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தது. அவ்வாணை வெளியிடப்பட்ட நாள் முதல் இன்றுவரை தொடர்ந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இதனை இயற்றிய பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளை அவர்கள் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை என்று அழைக்கப்படுகிறார். இப்பாடலின் வரிகளை மெல்லிசை மன்னர் திரு.எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்கள் இசையமைக்க திரு.டி.எம்.சௌந்தரராஜன் மற்றும் திரு.பி.சுசீலா அவர்களால் பாட பெற்று இசை தட்டு வெளியிடப்பட்டது. இவ்வாறு தமிழ்த்தாய் வாழ்த்து நாம் பாட ஆரம்பித்து 50 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 25.06.2020 அன்று, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

மாண்புமிகு அம்மாவுடைய அரசு கடும் சோதனையான நேரத்திலும், குறு, சிறு, நடுத்தர தொழில்கள் மற்றும் பெருந்தொழில்கள், எவ்விதத்திலும் பாதிக்கப்பட கூடாது என்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. கோவை மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், குறு, சிறு, நடுத்தர தொழில்கள், பெரு நிறுவனங்களும் அதிகம் உள்ள பகுதி. அதை கவனத்தில் கொண்டு தான், முதன்முதலாக கோவை மாவட்டத்தை தேர்வு செய்து உங்களை எல்லாம் அழைத்து இந்த ஆலோசனை கூட்டத்தை இன்றைய தினம் நடத்தியிருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மாவுடைய அரசை பொறுத்தவரைக்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பிணை சொத்தின்றி உடனடி கடன் வழங்குவதற்காக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் – கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டு

கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு, 9,991 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.761.52 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது

திட்டத்தை 31.03.2020 அன்று அறிவித்தேன். இத்திட்டத்தின் மூலம் 1,064 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 125 கோடி ரூபாய் கடனுதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு தேவையான அளவிற்கு கடனுதவி வழங்க வேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தியதன் காரணமாக, இன்றையதினம் 1,57,098 குறு, சிறு மற்றும்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பிணை சொத்தின்றி உடனடி கடன் வழங்குவதற்காக 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் – கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டு திட்டத்தை 31.03.2020 அன்று அறிவித்தேன். இத்திட்டத்தின் மூலம் 1,064 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 125 கோடி ரூபாய் கடனுதவியாக அளிக்கப்பட்டிருக்கிறது.

நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சுமார் 4,145 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கின்றன. இது இந்திய அளவில் 10 விழுக்காட்டை பெற்று தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்கள் முன்னிலையில் உள்ளன. அந்தளவிற்கு நாம் கடனுதவியை பெற்றிருக்கின்றோம்.

கோவை மாவட்டத்தை பொறுத்தவரைக்கும், 9,991 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு இதுவரை 761.52 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இது தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட கடனில் 17 சதவிகிதம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே நம்முடைய தொழில் கூட்டமைப்பை சேர்ந்த நிருவாகிகள் பல்வேறு கருத்துகளை தெரிவித்திருக்கின்றீர்கள். கோவை மாவட்டம் முழுவதும் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி கொண்டிருக்கின்றது. இன்றைக்கு தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாக கோவை மாவட்டம் இருக்கின்ற காரணத்தினாலே, அதன் உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து, அதிகமான பாலப் பணிகள் இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் முழுவதும் குறைக்கப்படும். அதேபோல, மேற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலம் எடுக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல, **அவிநாசி சாலையில் 8.5 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மிகப் பெரிய பாலம், சுமார் 1,627 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

மக்களுக்கு தேவையான குடிநீர் தடையின்றி வழங்குவதற்காக 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பில்லூர் மூன்றாம் கூட்டுக் குடிநீர் திட்டத்தையும் அறிமுகம் செய்து, அதற்கும் இன்றைக்கு இங்கே முதற்கட்டமாக அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இப்பணி மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டு, முதற்கட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 6 கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் எல்லாம் முழுவதும் நிறைவேற்றப்படும். இந்த 7ஆவது கூட்டுக் குடிநீர் திட்டமும் டெண்டர் விடப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டு விட்டன.

தடையில்லாத மின்சாரம் கொடுப்பதற்கு வெளி மாநிலத்திலிருந்து நம்முடைய கோவை பகுதிக்கும், திருப்பூர் பகுதிக்கும் முழுமையாக கொடுப்பதற்கு அங்கே Sub-stations அமைப்பதற்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் உருவாக்கி கொண்டிருக்கிறோம். **விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு நிலம் எடுக்கின்ற பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று கொண்டிருக்கின்றது.** ஆகவே, நீங்கள் வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றி வருகிறது.

இராணுவத்திற்கு தேவையான உதிரி பாகங்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை அமைத்திட ஏதுவாக, மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த போது கோவையில் Defence Corridor அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அப்படி வருகின்ற போது, தொழிற்சாலைகள் அதிகமாகும், அதனால் அதிகமான வேலைவாய்ப்புகள் உருவாகும், பொருளாதாரமும் உயரும். அந்த சூழ்நிலை ஏற்படுவதற்கு எங்களுடைய அரசு துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து கொள்கிறேன்.

நீங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் எங்களிடத்திலே இருக்கிறது. இந்த தொழில் கூட்டமைப்பை சேர்ந்த நிருவாகிகள் அளித்த ஆலோசனைகளை எங்கள் அரசு பரிசீலித்து, அவற்றை நிறைவேற்றுவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

மருத்துவ நிபுணர்கள் சொல்கின்ற வழிமுறைகளை நம்முடைய அரசு அறிவித்து, அதை மாவட்ட நிருவாகம் முறையாக கடைபிடித்ததன் விளைவாக, வைரஸ் பரவலை கட்டுக்குள் வைத்திருக்கிறோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 26.06.2020 அன்று, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள், கொரோனா நோய்த் தொற்று தடுப்புப் பணிகள் மற்றும் முக்கொம்பு கதவணை கட்டுமானப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் பரவி வருகின்ற கொரோனா வைரஸ் தொற்று நோயை தடுக்கின்ற முயற்சியில் தமிழகம் சிறந்த முறையில் இப்பணியை ஆற்றி வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தங்கள் மாவட்டத்தில் இந்த வைரஸ் தொற்று பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சி எடுத்து வருகிறார். திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடன், மாவட்ட நிருவாகமும் சிறப்பான முறையில் கொரோனா வைரஸ் தடுப்பு முயற்சியில் ஈடுபட்டு, அதன் பரவலை தடுக்கின்ற ஒரு நிலையை பார்க்கின்றோம்.

இந்த புதிய நோய்த் தொற்று ஒருவரிடமிருந்து மற்றவர்களுக்கு எளிதாகப் பரவும் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ஐ.சி.எம்.ஆர்., நம்முடைய மருத்துவ வல்லுநர்கள், நிபுணர்கள் சொல்கின்ற வழிமுறைகளை நம்முடைய அரசு அறிவித்து, அதை மாவட்ட நிருவாகம் முறையாக கடைபிடித்ததன் விளைவாக, வைரஸ் தொற்றை இன்றைக்கு நாம் தடுக்கின்ற நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

உலக அளவிலேயே வல்லரசு நாடுகளில் கூட இந்த வைரஸ் பரவலை தடுக்க முடியாத ஒரு சூழல் இருக்கின்ற காலகட்டத்தில், தமிழகத்தில் இந்த வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு கடுமையான முயற்சி எடுத்து இன்றைக்கு கட்டுக்குள் வைத்திருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்புப் பணிகள் எந்த அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, என்பதையெல்லாம் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் தெரிவிக்க உள்ளார்கள்.

அதேபோல, மாண்புமிகு அம்மாவினுடைய அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எவ்வாறு நடந்து கொண்டிருக்கின்றது என்ற விவரமும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட இருக்கின்றன. விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்களை அம்மாவினுடைய அரசு அறிவித்திருக்கின்றது. அந்தத் திட்டங்கள் எல்லாம் முழுமையாக விவசாயிகளுக்கு சென்று சேர்ந்திருக்கின்றதா என்பதைப் பற்றியும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆலோசிக்க இருக்கின்றோம்.

அதேபோல, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை 2015இல் நடத்தினார்கள். அதில் சுமார் 2,42,160 கோடி ரூபாய் தொழில் முதலீட்டை ஈர்த்தார்கள். மாண்புமிகு அம்மாவுடைய அரசு 3 இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இன்றைக்கு முதலீட்டை ஈர்த்து, சுமார் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அந்தப் பணிகளும் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன. அந்த தொழில்கள் எந்தளவிற்கு நடைபெற்று கொண்டிருக்கின்றன என்பதை பற்றியும், கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு அரசு வழங்குகின்ற கடனுதவிகள் முழுமையாக சேருவதற்கு உண்டான ஆலோசனைக் கூட்டமும் இந்த கூட்டத்திற்கு பிறகு நடைபெற இருக்கிறது.

அதேபோல, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அரசு அறிவித்த கடன்கள் முழுமையாக மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சென்றடைந்து, அதை அவர்கள் முழுமையாக பயன்படுத்தி கொண்டார்களா என்ற விவரங்கள் எல்லாம் இந்த கூட்டத்திற்கு பின்பு விவாதிக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன். ❖

வாழைத்தண்டு

வாழைத்தண்டு தன் பெயரிலே நம்மை வாழ வைக்கும் சக்தி கொண்டது. முக்கனிகளுள் ஒன்றான வாழையின் அனைத்து பாகங்களும் உடலின் பல்வேறு பிரச்சினைகளை சரிசெய்யும் அளவில் சத்துக்களை உள்ளடக்கியுள்ளது. அதிலும் வாழைத்தண்டை ஜூஸ் போட்டு குடிக்கலாம் என்ற ஒன்றே தெரிந்திருக்காது. ஆனால், மற்ற பழங்களை ஜூஸ் போட்டு குடிப்பது போல, வாழைத்தண்டையும் ஜூஸ் போட்டு குடிக்கலாம். வாழைத்தண்டு நார்ச்சத்துள்ள உணவுப் பொருளாகும்.

★ உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. கோடை காலத்தில் வாழைத்தண்டு அதிகம் சேர்த்துக்கொள்வதன் மூலம் உடல் உஷ்ணத்தைக் குறைக்கும். நீர் சுருக்கு ஏற்படாமல் பாதுகாக்கும்.

★ வாழைத்தண்டானது உடலின் தேவையற்ற கழிவுகளை வெளியேற்றுகிறது. சிறுநீரகக் கல் பிரச்சினை உள்ளவர்கள் தினசரி வாழைத்தண்டு ஜூஸ் பருகலாம். இதனால் சிறுநீரக கல் கரைந்து காணாமல் போகும்.

★ வாழைத்தண்டில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. எனவே, உடல் பருமனால் அவதிப்படுபவர்கள், இரத்தத்தில் கொழுப்புச் சத்து அதிகரித்து இருப்பவர்கள் இதை அடிக்கடி உணவாக எடுத்துக் கொள்ளலாம்.

★ வாழைத்தண்டில் நார்ச்சத்து அளவுக்கு அதிகமாக இருப்பதால், எடையைக் குறைக்க நினைப்போர் வாழைத்தண்டு ஜூஸை காலையில் தினமும் ஒரு டம்ளர் குடித்து வந்தால், நீண்ட நேரம் பசி எடுக்காமல் இருப்பதோடு, உடல் எடையும் விரைவில் குறையும்.

★ சிறுநீரகக் கற்கள் வராமல் இருக்கவும், இருக்கும் சிறுநீரக கற்கள் விரைவில் கரையவும், குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது வாழைத்தண்டு ஜூஸ் குடிக்க வேண்டும்.

★ தினமும் 20 கிராம் அளவிற்கு வாழைத்தண்டை நம் உணவில் சேர்த்துக்கொள்ள பல்வேறு நன்மைகளை அடையலாம்.

படமும்/ செய்தியும்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், ரூ.25.53 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.06.2020 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை, சட்டத்துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ஆகிய துறைகளில் 25 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

படமும் / செய்தியும்

சேலம்-ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்ட புனரமைப்புப் பணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.06.2020 அன்று சேலம் மாவட்டம், மேட்டுப்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரூ.19.17 கோடி மதிப்பீட்டிலான சேலம்–ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்ட புனரமைப்புப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 28.06.2020 அன்று சேலம் மாவட்டம், தலைவாசலில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த கால்நடை ஆராய்ச்சி பூங்கா மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரி மாதிரி வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள்

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோஹித்** அவர்களை 04.07.2020 அன்று ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள்.

படமும்/ செய்தியும்

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாள் விழா

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகுமுத்துக்கோன் பிறந்தநாளை முன்னிட்டு, 11.07.2020 அன்று சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ஜூலை 1 : மருத்துவர் தினம்

மனித உயிர்களை காக்கும் அற்புதமான பணியை மேற்கொண்டு வரும் மருத்துவர்களின் வாழ்வு சிறக்கட்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் வாழ்த்துச் செய்தி (01.07.2020)

உயிர்காக்கும் மருத்துவர்களின் கடமையை பாராட்டி அவர்களுக்கு நன்றி பாராட்டும் வகையில் டாக்டர் பிதான் சந்திர ராய் அவர்களின் பிறந்த நாளான ஜூலை மாதம் முதல் நாள் மருத்துவர்கள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. கொரோனா தொற்று பரவாமல் காத்திட இந்நாளில் நாடு முழுவதும் அயராது பணியாற்றி வரும் மருத்துவர்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவர்களின் பணியினை நாடே போற்றிக் கொண்டிருக்கிறது. உயிர் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்களை நான் இறைவனுக்கு நிகராக கருதுகின்றேன். நேரம் காலம் பார்க்காமல், தன்னலம் கருதாமல், ஓய்வின்றி உழைக்கக் கூடியவர்கள் நம்முடைய மருத்துவர்கள். இந்த பேரிடர் நோய்த் தொற்று காலத்தில், கடமை தவறாமல் கண்ணியத்துடனும், தங்களது உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றி வரும் மருத்துவர்களின் தியாகத்திற்கு நிகர் ஏதுமில்லை.

மருத்துவர்களின் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு மகத்தான பணி செய்து வரும் மருத்துவர்களுக்கு எப்போதுமே துணை நிற்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித உயிர்களைக் காக்கும் அற்புதமான பணியை மேற்கொண்டு வரும் மருத்துவர்களின் வாழ்வு சிறக்கட்டும் என இத்தருணத்தில் வாழ்த்துவதோடு, இந்த நன்னாளில் மருத்துவர்களை நாம் நினைவு கூர்ந்து வாழ்த்தி, அவர்களுடைய பணி மென்மேலும் சிறக்க எனது வாழ்த்துகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நோய் எதிர்ப்பு ஆற்றலை கொண்ட வெற்றிலை

வெற்றிலை "மிளகு" குடும்பத்தை சேர்ந்ததாகும். பொதுவாக வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றை சரியான விகிதத்தில் கலந்து சுவைக்கும்போது அந்த சுவை உடலையும் மூளையையும் சுறுசுறுப்படைய செய்கிறது. அதே நேரம் இதயத்தையும் வலுப்படுத்துகிறது. வெற்றிலை ஒரு மருத்துவ மூலிகையாகும். ஆராய்ச்சியில், வெற்றிலையில் மிகவும் வீரியமிக்க நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட 'சவிக்கால்' என்னும் பொருள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. வெற்றிலையில் கால்சியம், இரும்புச்சத்து ஆகியன அதிகம் உள்ளது.

வெற்றிலையினால் ஏற்படும் பயன் :

- சிறந்த நோய்த்தடுப்பு ஆற்றல் வெற்றிலை தாம்பூலத்தில் உள்ளது. நாக்கில் வரும் பிரச்சினைகளுக்கு வெற்றிலைச் சாறு நல்ல மருந்தாகும்.
- சர்க்கரை வியாதி உள்ளவர்கள், அல்சர் உள்ளவர்கள், விஷப்பூச்சி கடித்தவர்கள், வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் எனப் பல்வேறு நோய்களுக்கு இது அருமருந்தாக பயன்படுகிறது.
- வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கற்பூரத்தைச் சேர்த்துக் குழப்பி தலையில் வலியுள்ள இடத்தில் தடவினால் தலைவலி உடனே குணமாகும்.
- இலைகளும் வேர்களும் மருத்துவ பயன் உடையவை. இலைகளில் காணப்படும் எளிதில் ஆவியாகும் எண்ணெய் மூச்சுக்குழல் நோய்களுக்கு மருந்தாகிறது.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மகத்தான சாதனைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க தீவிர தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது.

அந்த வகையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஏழை, எளிய மக்களின் பசிப்பிணியை போக்கிடும் வகையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து செயல்படுத்தி வருகிறது.

25.03.2020 முதல் தமிழ்நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்ட நிலையில் நியாயவிலைக் கடைகள் வாயிலாக ஏப்ரல் 2020 திங்களில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரருக்கும் ரூ.1,000/– கொரோனா ரொக்க நிவாரணத் தொகையானது 98.6 சதவீத அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு மக்கள் பயன்பெற்றுள்ளனர். மேலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அரிசி, பருப்பு, சர்க்கரை கோதுமை மற்றும் சமையல் எண்ணெய் ஆகியவை ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு விலையில்லாமல் வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் சொந்த நிதியாதாரம் மூலம் முன்னுரிமையற்ற அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருக்கும் தலா 5 கிலோ அரிசியினை இம்மூன்று மாதங்களுக்கும் விலையின்றி வழங்க ஆணையிட்டு ஏழை எளிய, அடித்தட்டு மக்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்பெற்றுள்ளனர்.

ஊரடங்கு காலத்தில் பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி தரமான காய்கறிகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று வழங்கும் விதமாக கடந்த 29.03.2020 முதல் கூடுதலாக நடமாடும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் காய்கறிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

65 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் தற்போது வரை செயல்பட்டு வரும் 188 நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக 17.06.2020 வரை 4,593.048 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.12.13 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டு பொதுமக்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு தேவையான 19 வகை மளிகைப் பொருட்கள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 19 மளிகைப் பொருட்கள் அடங்கிய 10 இலட்சம் தொகுப்புகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. வெளிச்சந்தையில் ரூ.597/– மதிப்புள்ள பொருட்கள் ரூ.500/– க்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இடையில் ஊரடங்கு தளர்வு செய்யப்பட்டு தனியார் கடைகளும் விற்பனை செய்ய தொடங்கின. இருந்த போதிலும் ரூ.500 மதிப்பிலான 19 மளிகைப் பொருட்கள் 10 இலட்சம் தொகுப்புகள் விற்பனை செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு கடந்த 2 மாதங்களில் (17.06.2020) வரை 6,91,184 மளிகைத் தொகுப்புகள் ரூ.34.61 கோடி மற்றும் சில்லரை விற்பனையின் மூலம் ரூ.3.16 கோடி ஆக மொத்தம் ரூ.37.77 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சி, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு முழு ஊரடங்கு 19.06.2020 முதல் 30.06.2020 வரை அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதிகளைச் சேர்ந்த அரிசி பெறும் 21.83 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.218 கோடியே 35 இலட்சம் மதிப்பில் தலா ரூ.1,000/– ரொக்கம் அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்குவதற்கு உத்தரவிட்டுள்ளார். இப்பணியினையும் துறை அலுவலர்கள், ஊழியர்கள் எவ்வித தொய்வுமின்றி வழங்கவுள்ளார்கள்.

இப்பணியில் ஈடுபடும் நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கு, ஒருமுறை ஊக்கத்தொகையாக விற்பனையாளர்களுக்கு ரூ.2,500/–ம் கட்டுநர்களுக்கு ரூ.2,000/– அனுமதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

பொதுமுடக்கத்தினால் போக்குவரத்து வசதி இல்லாத நேரங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோக சேவை பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கில், பொது விநியோகத் திட்ட பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு தினசரி போக்குவரத்து செலவினமாக ரூ.200/– அனுமதித்து ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

கொரோனா தொற்று காலத்தில், அத்தியாவசிய பொருட்கள் விநியோகிக்கும் பணியில் ஈடுபடுகையில், தொற்றின் காரணமாக பாதிக்கப்படும் பொது விநியோகத் திட்ட பணியாளர்களுக்கு அரசின் நிதியுதவிகளைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படமும் \ செய்தியும்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவிட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில், 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் நினைவிட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நினைவிட கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டத்தில், ரூ.447.32 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 10.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 10.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 447 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில், கடந்த 2017–2018ஆம் கல்வியாண்டில் புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், 2019–2020ஆம் கல்வியாண்டில் கரூரில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் கரூர் அரசு மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்பட்டன. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செயல்பட்டு வந்த ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரியானது 2019–2020ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் நிதியுதவியுடன், கடந்த 2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று சரித்திர சாதனையை படைத்துள்ளது.

நன்மதிப்பு, தன்னறிவு, தன்னடக்கம் இவை மூன்றுமே வாழ்க்கையை அதன் உன்னத நிலைக்கு இட்டுச்செல்கின்றன.

அதன்படி, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 10 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அந்த வகையில், 11ஆவது மருத்துவக் கல்லூரியாக நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 40 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய அரசு மருத்துவக் கல்லூரி நிறுவிட, 447 கோடியே 32 இலட்சம் ரூபாய் அனுமதித்து நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசின் பங்களிப்பாக 195 கோடி ரூபாய் நிதியும், தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக 130 கோடி ரூபாய் நிதியுடன், கட்டடங்கள் கட்டுவதற்காக கூடுதலாக 122 கோடியே 32 இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கப்படும். முதற்கட்டமாக தமிழ்நாடு அரசால் 110 கோடி ரூபாய் நிதியும், மத்திய அரசால் 50 கோடி ரூபாய் நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் 141 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் 130 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குடியிருப்பு மற்றும் விடுதிக் கட்டடங்கள் போன்றவை 175 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும். நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி 150 எம்.பி.பி.எஸ். இடங்களுடன் நிறுவப்படும்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க....

வைரஸ் மற்றும் பாக்டீரியாக்களை எதிர்க்க வல்லது பூண்டு. கூடவே, இஞ்சியும் நலம் தரும். கீரையிலும், சட்னியிலும் பூண்டு, இஞ்சி சேர்க்கலாம். பாலில் 3 பூண்டு நசுக்கிப் போட்டு பருகலாம். தேனில் இஞ்சி சாறு கலந்து பருகலாம்.

படமும்/ செய்தியும்

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 118ஆவது பிறந்தநாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 118ஆவது பிறந்தநாளையொட்டி, 15.07.2020 அன்று, சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.கா.பாண்டியராஜன், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.பி.சண்முகநாதன், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் திரு.மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் கந்தம்பட்டி, நான்கு வழிச்சாலை மேம்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கந்தம்பாடி நான்கு வழிச்சாலை மேம்பாலம், பேளூர்–கிளாக்காடு–தும்பல் அருகில் கூட்டாற்றின் குறுக்கே 3 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டபாலம், ஓமலூர்–சங்ககிரி–முத்துநாயக்கன்பட்டி செல்லும் சாலையில் சரபங்கா நதியின் குறுக்கே 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பள்ளிக் கல்வித் துறை, வருவாய்த் துறை, பதிவுத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கால்நடை பாராமரிப்புத்துறை, பொதுப்பணித்துறை ஆகிய துறைகளின் சார்பில் 8 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 10 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 76 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 34 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஆ.கார்த்திக், இ.ஆ.ப., சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

காளான் மற்றும் அசைவ உணவுகளை வீட்டில் சமைத்து சாப்பிடலாம். நன்கு வேகவைக்க வேண்டும். குறிப்பாக மீன் நல்லது.

படமும்/ செய்தியும்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் தலைமையில் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மு. தம்பிதுரை மற்றும் திரு. கே.பி.முனுசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.சி.வி. ராஜேந்திரன் மற்றும் திருமதி என். மனோரஞ்சிதம், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம் இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சு. பிரபாகர், இ.ஆ.ப., கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. பண்டி கங்காதர், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள பன்னாட்டு மலர் ஏல மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் சார்பில் ஓசூரில் 20 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பன்னாட்டு மலர் ஏல மையத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். உடன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தொழில் புரிபவர்களுக்கு தேவையான உதவிகளை முழுமையாக செய்ய அரசு தயாராக உள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இது ஒரு சோதனையான நேரம். இன்று உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்ற கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவக்கூடிய நோய். இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு சில வழிமுறைகளை அறிவித்து, அதனை பின்பற்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதன் மூலமாக நோய்ப் பரவலை ஓரளவிற்கு நாம் தடுத்திருக்கின்றோம்.

இந்த இடைப்பட்ட காலத்தில் தொழிற்சாலைகள் இயங்குவது தடைபட்டிருக்கிறது. இந்த நோய்ப் பரவலைத் தடுக்கின்ற வழிமுறைகளை அரசு கண்டறிந்து அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினாலே, ஊரடங்கு தளர்த்தப்பட்டு, சென்னையைத் தவிர்த்து அனைத்து மாவட்டங்களிலும் 100 சதவிகிதப் பணியாளர்களை வைத்து தொழிற்சாலைகள் இயங்கலாம் என்ற அறிவிப்பு கொடுத்து, தொழிற்சாலைகள் எல்லாம் தற்பொழுது இயங்கி வருகின்றன. இருந்தாலும், இன்னும் சில கட்டுப்பாடுகளை நாங்கள் வைத்திருக்கின்றோம். ஏனென்றால், இது ஒரு புதிய நோய், இது எவ்வாறு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவுகின்றது என்பதை கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில், உயிர் முக்கியமாக இருப்பதால், அதைக் காப்பாற்ற

வேண்டிய கடமை அரசுக்கு முக்கியம். எனவேதான், இவ்வளவு கட்டுப்பாடுகளோடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசைப் பொறுத்தவரை தொழிற்சாலைகள் நன்றாக இயங்க வேண்டும், மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற அடிப்படையிலே தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் இயங்குவதற்கு அரசு அறிவித்துள்ள கட்டுப்பாடுகளை தொழிலதிபர்கள் கவனமாகக் கையாள வேண்டும். இல்லையெனில், தொழிலாளர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு விடும். அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை அனைத்துத் தொழிற்சாலைகளும் பின்பற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இது உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதினால், நாம் ஒவ்வொருவரும் அக்கறையோடு செயல்பட வேண்டிய நேரம். அதனால் தொழிலதிபர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு தக்க பாதுகாப்பு செய்து தர வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசாங்கம் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் இயங்குவதற்கு தேவையான கடனுதவிகளை அறிவித்திருக்கிறது. இதனை வங்கி மேலாளர்களும் தெரிவித்தார்கள். ஒசூர் தொழிற்பேட்டையில் குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை சுமார் 139 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக சொன்னார்கள். 20 விழுக்காடு கடனுதவி வழங்கப்படுமென்ற மத்திய அரசின் அறிவிப்பின்படி, வங்கி கடனுக்கு விண்ணப்பித்த குறு, சிறு, நடுத்தரத் தொழில்களில் பெரும்பாலானவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், தேவையான கடனுதவியை வழங்குவதற்கு வங்கிகள் தயாராக உள்ளன. தமிழகத்தில் ஒசூர் மிகப்பெரிய தொழிற்பேட்டையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தொழிற்சாலைகள் அதிகமாக வருகின்றபொழுதுதான் பொருளாதார மேம்பாடு அடைய முடியும், படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். அந்நியச் செலவாணியை மீட்டுத் தருகின்ற ஒரு பகுதியாக இது விளங்கிக் கொண்டிருக்கிறது. அரசு இதற்காக முன்னுரிமை வழங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க முனைப்பு காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு புதிய தொழிற்சாலைகள் வருவதற்கு அரசாங்கமும் நிலம், மின்சாரம் போன்ற தேவையான உதவிகளை செய்து கொடுக்கிறது. புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு உடனடியாக அனைத்து அனுமதிகளும் கிடைப்பதற்கு Single Window System ஏற்படுத்தி அதனை சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாதமும் என்னுடைய தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறுகிறது. புதிய தொழிற்சாலைகள் தொடங்க முன்வந்து, அவர்களுக்கு ஏதேனும் இடர்பாடுகள் இருந்தால் அதனைக் களைவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, தொழில் புரிபவர்களுக்கு தேவையான உதவிகளை முழுமையாக செய்ய அரசு தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



ஜூலை 15 : பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள்

உழைப்பால் உயர்ந்த உத்தமர்

கடுமையான உழைப்புதான் மக்களை வறுமைப் பிடியிலிருந்து நிச்சயம் மீட்கும் என்று காமராசர் கூறி வந்தது அனுபவப்பூர்வமான உண்மையாகும்.

சாதாரணத் தொண்டராக இருந்த ஒருவர் மக்கள் அனைவராலும் போற்றப்படும்படி மாமனிதராக விளங்கியதன் காரணம் அவர் தேனீ போன்று உழைத்து வாழ்ந்ததனாலேயாகும். அவர் ஆறாம் வகுப்புவரைதான் படித்தார். அகிலம் புகழும்படி உயர்ந்து நின்றார் என்று பொறாமைப்படுவதில் பயனில்லை. அவர் ஒவ்வொரு நிலையிலும் முன்னேற வேண்டும் என்று துடித்து நின்ற துடிப்பும், அறிந்து கொள்ள வேண்டியவை நிறையவே உள்ளன என்பதால் இவையனைத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், அவற்றின் அடிப்படையில் அவர் பட்ட பாடுகளும் கொஞ்சநஞ்சமல்ல.

உழைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தால் நிச்சயமாக முன்னேற முடியும் என்பதை அனுபவப் பூர்வமாகக் கண்டவர். காலத்தை வீணாக்காமல் உழைப்பு, உழைப்பு, ஓயாத உழைப்பு என்பதில் விருப்பம் கொண்டவராக இருந்தார். எனவே, உழைத்தார், உழைத்த வண்ணமே இருந்தார். உலகம் போற்றும் உயர்ந்த நிலையை அடைந்தார்.

படமும்/ செய்தியும்

கிருஷ்ணகிரி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று கிருஷ்ணகிரியில் அமைந்துள்ள கே.ஆர்.பி. அணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மதகுகள் சீரமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பால் உற்பத்தியாளர்களுக்கு கடனுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 15.07.2020 அன்று கிருஷ்ணகிரி பால் பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள சமநிலை பால் பண்ணையில் பால் உற்பத்தியாளர்களுக்கு கடனுதவி பெறுவதற்காக கிசான் அட்டையை வழங்கி, துவக்கி வைத்தார்கள்.

ஈரோடு மாவட்டத்தில்

ரூ.21.73 கோடி மதிப்பீட்டிலான 13 திட்டப்பணிகள், ரூ.76.12 கோடி மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 17.07.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 17.07.2020 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்டத்தில் 21 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, 76 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் காசிபாளையம் மற்றும் கடத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 2 கோடியே 71 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள், ஆய்வகம், கழிப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதிகள்;

வேளாண்மைத் துறை சார்பில் 8 கோடியே 20 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கட்டப்பட்டுள்ள 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிட்டங்கி, சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கட்டப்பட்டுள்ள 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஊரக கிடங்கி, தேசிய மின்னணு வேளாண் சந்தை திட்டத்தின் கீழ் பெருந்துறை, அந்தியூர், கோபிசெட்டிபாளையம் மற்றும் சத்தியமங்கலம் ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் அமைக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்புகள்;

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் சித்தோடு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் உள்ள துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அலுவலகத்திற்கு 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இருப்பு அறை கட்டடம் மற்றும் சித்த மருத்துவக் கட்டடம்;

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 5 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அம்மா பேட்டை ஒன்றியம், மாத்தூர் ஊராட்சி கூட்டு குடிநீர் திட்டம்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்;

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஓடாநிலையில் 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை கலையரங்க கட்டடம்;

வருவாய்த் துறை சார்பில் 2 கோடியே 84 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நம்பியூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம்;

என மொத்தம் 21 கோடியே 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 13 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்கள்.

மேலும், ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக தரம் உயர்த்த 64 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 8 மாடிகள் கொண்ட பல்நோக்கு மருத்துவமனை கட்டடம் கட்டும்பணி;

தோட்டக்கலைத் துறை சார்பில் மொடக்குறிச்சி வட்டம், அரச்சலூரில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மஞ்சள் வணிக வளாகம் மற்றும் ஆராய்ச்சி மையம்;

பள்ளிக் கல்வித் துறை சார்பில் அய்யம்பாளையம், அத்தானி, தவிட்டுபாளையம், ஏரி மற்றும் ஊஞ்சலூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் சித்தோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 8 கோடியே 17 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 26 வகுப்பறைகள், ஆய்வகங்கள், சுற்றுச்சுவர், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள்;

வருவாய்த் துறை சார்பில் ஈரோடு, சிவகிரி, அவல்பூந்துறை, வாணிப்புத்தூர் மற்றும் பவானி சாகர் ஆகிய இடங்களில் 84 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குறுவட்ட அளவருக்கான குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் அரச்சலூர், ஓடாநிலையில் 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள தீரன் சின்னமலை முழு உருவச்சிலை;

என மொத்தம் 76 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

ஜூலை 11 : வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள்

முதன்முதலாக ஆங்கிலேயரை எதிர்த்தவர் வீரன் அழகுமுத்துக்கோன்

முதன்முதலாக ஆங்கிலேயர்களை எதிர்த்தும், பாளையக்காரர்கள் ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்டுவதை தடுக்கவும் செய்தவர், வீரன் அழகுமுத்துக்கோன். இதனால் கோபமுற்ற ஆங்கிலேய அரசு பிரிட்டிஷ் ஜெனரல் மருதநாயகம் (யூசுப் கானை) அனுப்பி வைத்தது. வீரன் அழகுமுத்துக்கோனுக்கும், மருதநாயகம் பிள்ளைக்கும் (கான் சாஹிப்) பெத்தநாயக்கனூர் கோட்டையில் போர் நடந்தது. வீரன் அழகுமுத்துவின் வலது கால் சுடப்பட்டது. இருப்பினும் 3 மணி நேரம் போர் தொடர்ந்தது. இறுதியில் வீரன் அழகுமுத்துக்கோனும் அவருடைய 6 தளபதிகள் மற்றும் 248 போர் வீரர்களும் இரும்பு சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக்காட்டூர் என்னும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர். பீரங்கி முன் நிறுத்தப்பட்டு வரி செலுத்துமாறு வற்புறுத்தப்பட்டனர். மன்னிப்பு கேட்டால் உயிர் மிஞ்சும் என்று கேட்டும் வீரன் அழகுமுத்துக்கோன் மன்னிப்பு கேட்க மறுத்து விட்டார். பிறகு 248 வீரர்களின் வலது கரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. பீரங்கி முன் நின்ற வீரன் அழகுமுத்துக்கோனும் அவருடைய 6 தளபதிகளும் மார்பில் சுடப்பட்டு வீரன் மரணம் அடைந்தனர். பீரங்கி முன் நின்று சாகும் தருவாயிலும் தன்னைச் சேர்ந்தவர்களை காட்டிக்கொடுக்க மாட்டேன் என்று கூறியதன் வாயிலாக இவர் எவ்வளவு நெஞ்சுரம் மிக்கவர் என்பதும் புலனாகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூ.350 கோடி கடன் ஒப்புதல் வழங்கப்படுகிறது. இந்த கடனுதவி தொழில் நிறுவனங்கள் மீண்டும் இயல்பு நிலைக்கு வருவதற்கு பேருதவியாக இருக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள்
17.07.2020 அன்று, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இது ஒரு சோதனையான நேரம். இன்று உலகையே அதிர வைக்கின்ற கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. தமிழகத்திலுள்ள மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் ஈரோடு மாவட்டத்தில் இந்த நோய்ப் பரவல் கட்டுப்பாட்டிலுள்ளது. ஈரோடு மாவட்ட நிருவாகத்தின் சிறப்பான நடவடிக்கையினாலும், ஈரோடு மாவட்ட மக்கள் இந்த நோய்ப் பரவலைத் தடுக்கும் முயற்சிக்கு உறுதுணையாக இருந்ததாலும், இந்த வைரஸ் பரவல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதால் நம் வாழ்க்கைக்கே இதனால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவக்கூடிய நோய். இந்த 4 மாத காலங்களில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை ஆய்வு செய்த போது, ஏற்கெனவே ஏதாவதொரு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால்

பாதிக்கப்பட்டு உடனடியாக கொரோனா சிகிச்சை பெறாமல் இருப்பதினால்தான் உயிரிழப்பு ஏற்படுகிறது. எனவே, ஏற்கெனவே உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை மேற்கொண்டு வருபவர்கள், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிற்கான அறிகுறி தென்பட்டவுடன் உடனடியாக மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுக்கொண்டால் உயிர் பிழைத்துக் கொள்ளலாம். இதுவரை 67 விழுக்காடு நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் 1.56 இலட்சம் நபர்கள் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். நாம் பரிசோதனையை அதிகமாக மேற்கொண்டு உரிய சிகிச்சை அளித்த காரணத்தினால் இறப்பவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது, சுமார் 2,250 நபர்கள் இறந்துள்ளனர். மஹாராஷ்டிராவில் சுமார் 11 ஆயிரம் நபர்கள் இறந்திருக்கிறார்கள்.

இந்தக் காலகட்டத்தில் தொழிற்சாலைகளுக்கு ஒரு பெரிய சோதனை, மிகப் பெரிய சவாலாக உள்ளது. தொழில் மீண்டும் துவங்க வேண்டும், இயல்பு நிலைக்கு வரவேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கம் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கின்றார்கள். ஈரோடு மாவட்டத்தில் 8,329 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இருக்கின்றன. இவர்களுக்காக சுமார் 350 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. தொழில் நிறுவனங்கள் மீண்டும் இயல்பு நிலைக்கு வருவதற்கு இந்த கடனுதவிகள் பேருதவியாக இருக்கும்.

இங்கே பல்வேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கம் நிதிச் சுமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஈரோடு மாவட்டத்தின் முதன்மை தொழில்களான வேளாண்மை மற்றும் ஜவுளித் தொழில்கள் இரண்டிற்கும் முழு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நீங்கள் வைத்த கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலித்து, வேண்டிய அளவிற்கு தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்கு அரசு துணை நிற்கும். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட தொழிலதிபர்கள் அரிய பல கருத்துக்களை அரசின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறீர்கள். அரசு உங்களது கருத்துக்களை எடுத்துக் கொண்டு அதற்குண்டான முயற்சியை எடுக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தைக் கொண்டுவந்து, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்து, முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்போடு ஏரிகள், குளங்களை ஆழப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுவதையும் சேமித்து வைக்கவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், பவானி சாகர் அணையிலிருந்து பவானி ஆற்றில் 7 இடங்களில் தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசால் உத்தரவிடப்பட்டு, அந்தப் பணிகள் துவங்கவிருக்கின்றது.

குண்டாற்றில் தடுப்பணை கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அத்திக்கடவு – அவினாசி திட்டத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருக்கிறோம். இதன்மூலம் ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் பயன்பெறும். மேலும், ஈரோடு மாவட்டத்திற்கான அடிப்படை வசதிகளான சாலை வசதி, குடிநீர் வசதி, புயல் வெள்ளம் வந்தாலும் மின்சாரம் தடையின்றி கிடைப்பதற்கு வசதிகள் செய்து கொண்டிருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகள் இன்னும் இரண்டு மாதங்களில் நிறைவு பெற்று உங்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கும்.

ஈரோடு மாவட்டத்திற்கு Super Speciality Hospital கொடுத்துள்ளோம். காளிங்கராயன் ஹைவே–யிலிருந்து திண்டல்பாறை வரை உயர்மட்டப் பாலத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இன்னும் பல்வேறு உயர்மட்டப் பாலங்கள் வரவிருக்கின்றன. பல ரிங் ரோடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறோம். மாவட்ட ஆட்சியர் அலுவலக விரிவாக்கத்திற்கான கட்டடப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாறு பல பணிகள் ஈரோடு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன; இன்னும் பல பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; மேலும், பல பணிகள் தொடங்கவிருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பல வகைகளிலும், ஈரோடு மாவட்ட வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் தன்னலத்தைத் துறந்தவர்களா ? அப்படியாயின் உங்களை எதிர்க்கும் சக்தி ஒன்றுமில்லை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கிருமிநாசினி தெளித்திட 50 துரித செயல் வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் கிருமிநாசினி தெளித்திட 50 துரித செயல் வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கிருமிநாசினி தெளித்திட 50 துரித செயல் வாகனங்களின் (Quick Response Vehicle) சேவைகளை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 வாகனங்களை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை வீரர்கள் கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளுக்காக தமிழகமெங்கும் கிருமிநாசினி தெளிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்நாடு முழுவதும் சுமார் 3 இலட்சம் இடங்களில் கிருமிநாசினி தெளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக வான்நோக்கி உயரும் ஏணி ஊர்திகள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், கொரோனா தடுப்புப் பணிக்காக சென்னை மாநகரில் உள்ள குறுகிய சாலைகளில் கிருமிநாசினி தெளிக்கும் வகையில், காற்றழுத்த கிருமிநாசினி தெளிப்பான் பொருத்தப்பட்ட 25 இருசக்கர வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 03.06.2020 அன்று வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, கொரோனா தடுப்புப் பணிகளுக்காக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 50 துரித செயல் வாகனங்களின் (Bolero Camper) சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இவ்வாகனங்களில் கிருமிநாசினி தெளித்திட தண்ணீரை பனித் திவலையாக மாற்றி பீய்ச்சியடிக்கும் தொழில்நுட்பம் கொண்ட கருவிகள் மற்றும் பேரிடர்கால மீட்புப் பணிக்காக 8 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இரப்பர் இயந்திர படகுகள் பொருத்தப்பட உள்ளன. கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகள் முடிவுற்ற பிறகு, இவ்வாகனங்கள் சென்னையின் குறுகிய சாலைகளில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் இதர கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் அத்தீயினை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும்.

17.07.2020 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகள் தினத்தை முன்னிட்டு சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் உள்ள தியாகிகள் மணிமண்டப முகப்பில் அமைந்துள்ள தியாகி ஆர்யா (எ) பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி செண்பகராமன் ஆகியோரது திருவுருவச் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மாண்புமிகு மீன்வளம் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கா. பாண்டியராஜன், தமிழ் வளர்ச்சி மற்றம் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் பொ. சங்கர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தியாகி செண்பகராமன்

ஜெர்மனியின் உதவியோடு இந்தியாவின் சுதந்திரப் போரில் ஆங்கிலேயருக்கு எதிராகத் தாக்குதல்களில் ஈடுபட்ட புரட்சித் தலைவர்களில் தியாகி செண்பகராமன் ஒருவர். இந்தியா விடுதலை பெறவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் மிகவும் மெச்சத் தகுந்த வழியில் பணியாற்றினார். 1915ஆம் ஆண்டில் இந்தியப் புரட்சியாளர்கள் நிறுவிய இடைக்கால தேசிய அரசில் அவர் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார். இதிலிருந்தே அவரது பங்கு எத்தகையது என்பதை புரிந்து கொள்ள முடியும். உலகப்போருக்குப் பின்பும் அவர் இந்திய விடுதலைக்கு உதவும் வகையில் ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்தார். இதற்காகப் பல நாடுகளைச் சேர்ந்த மக்களது ஆதரவையும் திரட்டினார். சர்வதேச அளவில் இந்தியத் தொழில் வர்த்தக உறவுகளை உருவாக்கப் பாடுபட்டார். அதன்படியே நிறைவேற்றினார்.

ஜெர்மனியில் சர்வாதிகாரி ஹிட்லரை எதிர்த்து செண்பகராமன் வாதாடியதோடு, அவரையே தலைகுனிந்து வருத்தம் தெரிவிக்கும்படியும் செய்தார். இதனால் அந்நாளிலிருந்தே ஜெர்மனியில் தனக்கு பயங்கரமான ஆபத்துக்கள் தொடர்வதை நன்கறிந்திருந்தார். இதனால், பிற்காலத்தில் ஏதேனும் காரணங்களுக்காக ஜெர்மனியில் தனது வீட்டை, ‘எதிரிகள்’ அழிக்க முற்பட்டால் அவர்களுக்குத் தன்னிடமுள்ள இந்தியாவை பற்றியும் மற்றும் தன்னைப்பற்றிய எந்தக் குறிப்புகளும் கிடைக்கக் கூடாதென்ற முன்யோசனையோடு, அவைகளை பெர்லினிலேயே தனக்கு நம்பிக்கையானவரிடம் இரகசியமாகக் கொடுத்து பத்திரப்படுத்திவிட்டார்.

– ஜெய்ஹிந்த் செண்பகராமன்
எனும் நூலிலிருந்து

கோவிட்-19 வைரஸ் தொற்றால் பள்ளிகள் திறக்கப்படாத நிலையில் 10ஆம் வகுப்பு மாணாக்கர்கள் வீட்டிலிருந்து கல்விக் கற்க ஏதுவாக கல்வித் தொலைக்காட்சி வாயிலாக கல்வி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்தில், 14.07.2020 அன்று கல்வி நிகழ்ச்சிக்கான ஒளிபரப்பை தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கோவிட்–19 வைரஸ் தொற்று காரணமாக பள்ளிகள் திறக்கப்படாத நிலையில், 10ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் பள்ளி திறக்கும் வரை வீட்டிலிருந்து கல்வி கற்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசின் கல்வித் தொலைக்காட்சியின் வாயிலாக திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் இரண்டரை மணிநேரம் சிறப்பு கல்வி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பையும் மற்றும் பிற வகுப்புகளின் பாடங்களுக்கான ஒளிபரப்பினையும் தொடங்கி வைத்தார்கள். மேலும், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டத்தையும் துவக்கி வைத்தார்கள்.

பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித் தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணாக்கர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும், கல்வித் தொலைக்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 26.08.2019 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்தொலைக்காட்சியில், எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு பயன்படும் வகையில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள், படைப்பாற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள், மாணவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு சொல்லும் நிபுணர்களின் பதில்கள், பள்ளிக் கல்வித் துறையின் அறிவிப்புகள், புதுமையான முறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேர்காணல், அரசுப் பள்ளி மாணவர்களின் கண்டுபிடிப்புகள், கல்வியாளர்களின் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

கோவிட்–19 வைரஸ் தொற்றால் பள்ளிகள் திறக்கப்படாத நிலையில்,

10ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில், கல்வித் தொலைக்காட்சியின் வாயிலாக திங்கள் முதல் வெள்ளி வரை தினமும் இரண்டரை மணிநேரம் சிறப்பு கல்வி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பையும் மற்றும் பிற வகுப்புகளின் பாடங்களுக்கான ஒளிபரப்பினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

பள்ளிக் கல்வித் துறையில் 2020–2021ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளுக்கு பாடப்புத்தகங்களை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 12ஆம் வகுப்பு மாணாக்கர்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட விலையில்லா மடிக்கணினிகளில் கல்வி பயில ஏதுவாக மென் உருவிலான பாடங்களை (Video Lessons) மடிக்கணினிகளில் அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் (Hi-Tech Labs) வாயிலாக தரவிறக்கம் செய்யும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ❋

கொய்யா

கொய்யாப்பழம் ஒருவித நறுமணத்தை கொண்டிருக்கும், கொய்யாப்பழத்திற்கு பருவ காலம் உண்டு. சில குறிப்பிட்ட காலத்தில் தான் விளைகின்றது. இப்பழத்தில் பலவகைகள் உள்ளன. இப்பழத்தில் முக்கிய உயிர்ச் சத்துக்களும், தாது உப்புக்களும் அடங்கியுள்ளன. மேலும், கனி மட்டுமல்லாது இலை, பட்டை என அனைத்துமே மருத்துவ குணம் கொண்டுள்ளது. வைட்டமின் பி மற்றும் வைட்டமின் சி ஆகிய உயிர்ச்சத்து உள்ளன. கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு போன்ற தாது உப்புகளும் இதில் காணப்படுகின்றன. நார்ச்சத்தும் அதிகம் நிறைந்திருக்கிறது.

★ கொய்யாப்பழம் இரத்தத்தில் அதிகம் கொழுப்பு சேர்வதை தடுக்கிறது.

★ இரத்தத்தில் உண்டாகும் நச்சுக்களை நீக்கி சுத்தமாக்குகிறது.

★ அல்சர், மலச்சிக்கல் குடல் புண் போன்றவற்றை விரைவில் ஆற்றும் தன்மை கொண்டது கொய்யாப்பழம் .

★ போலிக் அமிலம் அதிகமுள்ள காரணத்தினால் கர்ப்பிணிப் பெண்கள் கொய்யாப்பழம் சாப்பிடுவது நல்லது.

★ உடல் எடையை குறைக்க நினைப்பவர்கள் கொய்யாப்பழத்தை அடிக்கடி உட்கொள்ள வேண்டும்

★ புற்றுநோய்க்கெதிராக கொய்யாப்பழம் சிறப்பாக செயல்படுகின்றது, ஏனெனில் “லைக்கோபினே”, “க்வெர்செடின்” போன்ற வேதிப்பொருள் அதிகம் நிறைந்துள்ளது.

★ கொய்யாப்பழத்தை சரிபாதியாக அறுத்து பார்த்தால் புற்றுநோய் செல்கள் போன்றே காட்சியளிக்கும்.

★ மலச்சிக்கல் குறைபாடு உள்ளவர்கள் இதனை தொடர்ந்து சாப்பிட வேண்டும். இதில் உள்ள நார்ச்சத்து சிறந்த மலமிலக்கியாக இருக்கிறது.

★ இரத்தத்தில் உள்ள கொழுப்பை கரைக்கிறது, இதனால் மாரடைப்பு பிரச்சினைகளுக்கு குட்பை சொல்லலாம்.

பட்டிதொட்டியெல்லாம் பள்ளிக்கூடங்களை அமைத்து, படிப்பறிவு மிக்கச் சமுதாயத்தை உருவாக்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை –15.07.2020

“தென்னாட்டு காந்தி”, “படிக்காத மேதை”, “கர்மவீரர்” என்று அன்போடு அழைக்கப்படும் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த தினத்தை அரசு விழாவாக கொண்டாடும் இவ்வேளையில், அவரைப் பற்றி நினைவு கூர்வதை நான் பெருமையாக கருதுகிறேன்.

1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாள் பிறந்த பெருந்தலைவர் அவர்கள், நாட்டுக்காக உழைப்பதையே தனது இலட்சியம் என கொண்டிருந்தார். பெருந்தலைவர் அவர்கள் நமது தாய்நாட்டின் சுதந்திர போராட்டத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். வேதாரண்யம் உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கலந்து கொண்டதால், ஆங்கிலேய அரசு அவரை கைது செய்து சிறையில் அடைத்தது. அதன் பின்னர் சுதந்திரப் போராட்டத்திற்காக பலமுறை சிறை சென்ற தியாகசீலர். திருமணமும் இல்லறமும் சமுதாயப் பணிக்கு தடையாக இருக்கும் என பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தவர்.

1954ஆம் ஆண்டில், அப்போதைய சென்னை மாநில முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், தமிழ்நாட்டின் பட்டித்தொட்டியெல்லாம் பள்ளிக் கூடங்களை அமைத்து, தமிழ் சமுதாயத்தை படிப்பறிவுமிக்க அறிவார்ந்த சமுதாயமாக உருவாக்கினார். பல தொழிற்சாலைகளை நிறுவி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர். அதேபோன்று, நீர்வள மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாட்டில் பல அணைகளை கட்டிய பெருமைக்குரியவர்.

“பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய எளிமை, தமிழகத்தை மட்டுமல்ல; இந்தியாவை மட்டுமல்ல; உலகத்தையே வசீகரித்து இருக்கிறது பெருந்தலைவர் காமராசர் அவர்கள் உடையில் மட்டுமல்ல, உணவில், பிறருடன் பழகுவதில், மேடை பேச்சு, இப்படி எல்லாவற்றிலும் அவருடைய ஒளி வீசியது” என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருந்தலைவரை மனதார பாராட்டி உள்ளார்.

காமராசருக்கு அருகில் எப்பொழுதும் ஒரு கைப்பெட்டி இருந்ததாகவும், அதைத் தான் பலமுறை பார்த்திருப்பதாகவும், ஆனால் அப்பெட்டியில் என்ன இருக்கிறது என யூகித்துக் கொள்ள முடியவில்லை எனவும், பெருந்தலைவர் காமராசரின் மறைவுக்கு பின்னர் அப்பெட்டி அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும், அப்பெட்டியை திறந்து பார்த்த போது, அதில் அவரது அன்னையின் படம் இருந்தது எனவும், இது அன்னையின் மீது அவருக்கு இருந்த பாசத்தை காட்டுவதாகவும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள், கர்ம வீரரைப் பற்றி நினைவு கூர்ந்துள்ளார். தன்னை பெற்ற தாயின் மீது வைத்திருந்த அளவு கடந்த அன்பை போலவே, பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தாய்த்திருநாட்டின் மீதும் மிகுந்த பற்று வைத்திருந்தார்.

எளிமைக்கும், நேர்மைக்கும் பெயர் பெற்ற பெருந்தலைவர் அவர்கள், தனது பதவியை விட தேசப் பணியே முக்கியம் என எப்போதும் நினைப்பவர். அதன் காரணமாகவே தனது முதலமைச்சர் பதவியையும் துறந்து நாட்டுக்காகப் பணியாற்றியவர். அகில இந்திய அளவிலும் தலைவர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தவர். இந்திய அரசின் உயரிய விருதான “பாரத ரத்னா” விருதினைப் பெற்றவர்.

“அவருடைய எளிமையால்; தன்னலமற்ற தொண்டால்; நாட்டுப் பற்றால்; புரிந்த தியாகத்தால் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்து நூற்றாண்டுகள் கடந்த போதிலும், நம்முடைய நினைவிலே என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையாகாது” என மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பெருந்தலைவரைப் பற்றி கூறியது இத்தருணத்தில் நினைவு கூரத்தக்கது.

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தில் முன்னேற்றம், கல்வியில் முன்னேற்றம், தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம், நீர்வளத்தில் முன்னேற்றம் என தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது அனைத்து துறைகளிலும் முத்திரையை பதித்த பெருந்தலைவர் காமராசர் அவர்களைப் போன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசும் தமிழ்நாட்டை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று, பீடு நடைபோடும்.

ஆவின் நிறுவனத்தின் சார்பில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் மோர், சாக்கோ லெஸ்ஸி, மேங்கோ லெஸ்ஸி நீண்ட நாட்கள் கெடாத சமன்படுத்தப்பட்ட பால் மற்றும் ஆவின் டீ மேட் பால் ஆகிய 5 புதிய பொருட்கள் அறிமுகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஆவின் நிறுவனத்தின் சார்பில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் ஆவின் மோர், சாக்கோ லெஸ்ஸி, மேங்கோ லெஸ்ஸி, நீண்ட நாட்கள் கெடாத சமன்படுத்தப்பட்ட பால் மற்றும் ஆவின் டீ மேட் பால் ஆகிய ஐந்து புதிய பொருட்களை அறிமுகம் செய்து வைத்தார்கள்.

ஆவின் நிறுவனம் தரம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பால் மற்றும் பால் பொருட்களை நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் வழங்கி, கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேல் பால் விற்பனையில் தமிழகத்தில் முன்னோடியாக திகழ்ந்து வருகிறது. மேலும், வெண்ணெய், நெய், பால்கோவா, ஐஸ்கிரீம் முதலான பால் பொருட்களையும் உயரிய தரத்தில் தயாரித்து ஆவின் பாலகங்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்து வருகிறது. அத்துடன் நுகர்வோர்களின் தேவைக்கேற்ப புதிய பால் உப பொருட்களை அவ்வப்போது ஆவின் நிறுவனம் அறிமுகப்படுத்தி வருகிறது.

அந்த வகையில், ஆவின் நிறுவனத்தின் சார்பில், கீழ்க்காணும் ஐந்து புதிய பொருட்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், ஆவின் நிறுவனத்தின் சார்பில் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

கஷ்டப்பட்டு அடையும் வெற்றியில்தான் மேன்மேலும் செய்ய வேண்டிய முயற்சியைத் தூண்டக்கூடிய சக்தி இருக்கிறது.

நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் ஆவின் மோர்

ஆவின் மோர் மற்றும் தயிர் மக்களிடையே பெரும் நன்மதிப்பை பெற்றுள்ளது. தற்போதைய கொரோனா வைரஸ் தொற்றுக் காலக் கட்டத்தில் மக்களுக்கு பயன்படும் வகையில் இஞ்சி, எலுமிச்சை, துளசி, மிளகு, சீரகம், பெருங்காயம், கருவேப்பில்லை, கொத்தமல்லி, உப்பு போன்ற நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய பொருட்களை சேர்த்து புதிய ஆவின் மோர் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த மூலிகை சக்தி நிறைந்த மோர், உடல் ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியினை மேம்படுத்தும் வகையில் தயாரிக்கப்படுகிறது. இந்த மோர், அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்தும் வகையில் 200 மில்லி லிட்டர் பாட்டில் 15 ரூபாய்க்கு விற்கப்படும்.

சாக்கோ லெஸ்ஸி மற்றும் மேங்கோ லெஸ்ஸி

ஆவின் நிறுவனம் சாதாரண லெஸ்ஸி மற்றும் புரோ பையோடிக் என்ற இரண்டு வகை லெஸ்ஸிகளை விற்பனை செய்து வருகிறது. மேலும், சாக்லெட் சுவைமிகுந்த சாக்கோ லெஸ்ஸி மற்றும் மாம்பழச் சுவையுடன் கூடிய மேங்கோ லெஸ்ஸி என்ற இரண்டு புதிய லெஸ்ஸிகளை 200 மில்லி லிட்டர் பாட்டிலில் 23 ரூபாய் என்ற விலையில் தற்போது அறிமுகப்படுத்துகிறது. இந்த புதிய லெஸ்ஸி வகைகள் குழந்தைகள் மற்றும் இளைஞர்களை கவரும் வகையில் மிகுந்த சுவையுடன் தயாரிக்கப்படுகின்றன.

நீண்ட நாட்கள் கெடாத சமன்படுத்தப்பட்ட பால் (UTH Milk)

நுகர்வோர்களின் குறிப்பாக வேலைக்கு செல்லும் இல்லத்தரசிகளின் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் நீண்ட நாட்கள் கெடாத வகையில் ஆவின் பால் அதிக வெப்பநிலையில் பதப்படுத்தப்பட்டு, Flexi பேக்குகளில் அடைக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த பால் பாக்கெட்டுகளை குளிர்சாதன பெட்டியில் வைக்க தேவையில்லை. அறை வெப்பநிலையில் (Room temperature) வைக்கும் பொழுது, 90 நாட்கள் வரை கெடாத வண்ணம் தயாரிக்கப்படுகிறது. இந்த பால் 4.5% கொழுப்பு சத்து மற்றும் 8.5 % புரதச்சத்தும் கொண்டது. 500 மில்லி லிட்டர் பாக்கெட் 30 ரூபாய் என்ற விலையில் இந்தப் பால் அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஆவின் டீ மேட் பால் (TEA MATE)

உணவகங்கள், தேனீர் கடைகள், விடுதிகள் மற்றும் சமையல்கலை வல்லுநர்களின் தேவையினை கருத்தில் கொண்டு, அதிக கொழுப்பு சத்துக் கொண்ட டீ மேட் என்ற புதிய பால் அறிமுகப்படுத்தப்படுகிறது. 6.5% கொழுப்பு சத்தும், 9% புரதச்சத்தும் கொண்ட 1 லிட்டர் டீ மேட் பால் பாக்கெட்டின் விலை 60 ரூபாய் ஆகும். கொழுப்பு சத்து அதிகம் இருப்பதால், தேனீர் கடைகள் மற்றும் உணவகங்களில் அதிக அளவிலான டீ மற்றும் காபி தயாரிப்பதற்கு இந்த பால் உபயோகமாக இருக்கும்.

ஜூலை 7: இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த நாள்

ஆதிதிராவிடர் மக்கள் நலனுக்காக தன் ஆயுளை அர்பணித்தவர்

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் எனும் கிராமத்தில் 07.07.1859ஆம் ஆண்டு பிறந்தார். இவரது தகப்பனார் பெயர் இரட்டைமலை ஆகும். 1890ஆம் ஆண்டு சென்னைக்கு வந்தார்.

தென்னிந்தியா முழுவதும் சென்று ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை நேரில் கண்டறிந்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், சாதிக்கொடுமையிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான வழியினை காணும் பணியில் ஈடுபட்டார். ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்டார். 1894ஆம் ஆண்டு குடியிருக்க வீட்டுமனைப் பட்டாக்களும், விவசாயம் செய்வதற்கு நிலங்களும், குழந்தைகளுக்கு கல்வி வசதியும் பெற்றுத்தந்தார். பஞ்சமி நிலங்களை மீட்டார். 1895ஆம் ஆண்டு சென்னை வந்த ஆங்கிலேய அதிகாரி வைஸ்ராய் லார்டு எல்சின் என்பவரிடம் மக்களுடன் நேரில் சென்று கோரிக்கை மனு அளித்தார்.

தொடர்ந்து மக்கள் பணி செய்த இவருக்கு ஆங்கிலேய அரசு 1926ஆம் ஆண்டு 'ராவ் சாகிப்', 1930ஆம் ஆண்டு 'ராவ் பகதூர்', 1936ஆம் ஆண்டு 'திவான் பகதூர்' பட்டங்களை வழங்கி கௌரவித்தது. 1940ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி தலைமையில் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் முன்னிலையில் திராவிட மணி எனும் பட்டம் வழங்கப்பட்டது. ஆதிதிராவிட மக்களின் நலனுக்காக தன் ஆயுள் முழுவதும் அயராது பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் 18.09.1945 அன்று இயற்கை எய்தினார்.

குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி, குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினச் செய்தி – 11.06.2020

உலகெங்கும் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்திடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ஆம் நாள் “குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்” கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இப்பூமியில் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை மிக இன்றியமையாததாகும். அந்த உரிமைகளை அவர்களிடமிருந்து பறிப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானது. குழந்தைகள் கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தால் மட்டுமே நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பதை கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, குழந்தைத் தொழிலாளர் முறை என்ற கொடுமையிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக ஒழித்திடும் வகையில், வேலையில் ஈடுபடுத்தப்படும் குழந்தை தொழிலாளர்களை மீட்டெடுத்து, சிறப்புப் பயிற்சி மையங்களில் அக்குழந்தைகள் கல்வி கற்கவும், அவர்களுக்கு விலையில்லா சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், காலணிகள், கல்வி உபகரணங்கள், சத்தான மதிய உணவு, கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள், மிதிவண்டிகள், மடிக்கணினிகள் வழங்கி வருவதோடு, உயர் கல்வி பயிலும் முன்னாள் குழந்தை தொழிலாளர்களுக்கு அவர்களின் கல்விக் காலம் முழுமைக்கும் 500 ரூபாய் வீதம் மாதாந்திர உதவித் தொகை வழங்குதல் போன்ற எண்ணற்ற நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

மேலும், 18 வயது நிறைவடையாத வளரிளம் பருவத்தினரை அபாயகரமான பணிகளில் அமர்த்தப்படுவதை முற்றிலுமாக தடை செய்து மத்திய அரசு வெளியிட்ட சட்டத் திருத்தத்தினை தமிழ்நாடு அரசு தீவிரமாக செயல்படுத்தி, குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

‘**குழந்தைகளின் வருமானம் நாட்டிற்கு அவமானம்**’ என்பதை உணர்ந்து, குழந்தைகளின் உரிமைகளை மதித்து, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி, குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட, அரசு மேற்கொள்ளும் சீரிய முயற்சிகளுக்கும், திட்டங்களுக்கும் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி குழந்தையின் பிறப்புரிமை!
அதை அவர்களுக்கு கொடுப்பது நமது கடமை!

கொரோனா பரவலால் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு இறுதியாண்டு பருவத் தேர்வுகளை செப்டம்பரில் நடத்த இயலாது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **ரமேஷ் போக்கிரியால் 'நிசாங்க்'** அவர்களுக்கு 10.07.2020 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

தமிழகம் உள்பட இந்தியாவின் பல பகுதிகளில் கொரோனா நோய்த் தொற்று வேகமாக பரவி வருகிறது. நோய்த் தொற்றை கட்டுப்படுத்தவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும், தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை நல்ல பலன்களைக் கொடுத்தாலும், இன்னும் மாநிலத்துக்கு சில சவால்கள் உள்ளன.

மாநில அரசின் முற்போக்கான கொள்கைகள் காரணமாக, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகளில் அதிகபட்சமாக சேர்க்கை விகிதம் 49 சதவீதமாக உள்ளது. கல்லூரி பருவத்தேர்வுகளை (செமஸ்டர்) ஏப்ரல் மாதமே நடத்த திட்டமிட்டிருந்தாலும் அதனை கொரோனா நோய்த் தொற்றின் தாக்கத்தால் நடத்த முடியவில்லை. பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் தங்கள் வசதிக்கேற்ப தேர்வுகளை நடத்திக்கொள்ள பல்கலைக்கழக மானியக்குழு (U.G.C.) கடந்த 29.04.2020 அன்று சில விதிமுறைகளை அறிவித்தது.

இந்த நிலையில் கடந்த 06.07.2020 அன்று பல்கலைக்கழக மானியக் குழு (U.G.C.) அறிவித்த புதிய விதிமுறைகளின்படி அனைத்து கல்வி நிறுவனங்களும் இறுதியாண்டு மாணவர்களுக்கு செப்டம்பர் மாதத்துக்குள் தேர்வுகளை நடத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளது. பல மாணவர்கள் வேறு மாவட்டங்களிலும், வேறு மாநிலங்களிலும் இருப்பதால், அவர்களால் தேர்வு மையங்களுக்கு வர முடியாத சூழல் நிலவுவதால் இந்த புதிய அறிவிப்பு பல சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது. மாணவர்கள் பலரால் இணைய வசதியை அணுக முடியாத சூழல் நிலவுவதால் இணையவழி தேர்வுகளையும் நடத்த முடியாத நிலை உள்ளது.

இதுதவிர, பெரும்பாலான அரசு மற்றும் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்களில், அறிகுறியற்ற கொரோனா நோய்த் தொற்றாளர்களைத் தனிமைப்படுத்தி வைக்க சிகிச்சை மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. அவ்வாறாகவே இன்னும் சில காலத்திற்கு அவை இருக்கும்.

வரும் செப்டம்பர் மாதத்துக்குள் தேர்வுகளை நடத்த முடியாத சூழல் உள்ளது. இதனால் மாணவர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். மேலும், வளாக நேர்காணல் மூலம் வேலைகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வெளிநாடுகளில் படிக்க விண்ணப்பித்த மாணவர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

இந்தியாவின் பல மாநிலங்கள் இறுதி பருவ தேர்வுகளை நடத்துவதில்லை என முடிவெடுத்துள்ளது. தொழில் வாய்ப்புகள், எதிர்கால வாய்ப்புகளை உறுதி செய்வதற்கும், மாணவர்களுக்கு சுகாதாரம் பாதுகாப்பு நியாயமான மற்றும் சமமான வாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கும், தரம் மற்றும் கல்வி நம்பகத் தன்மையில் சமரசம் செய்யாமல் மாநிலங்களுக்கு அதன் சொந்த மதிப்பீட்டு முறைகளை உருவாக்க சுதந்திரம் வழங்கலாம்.

எனவே, பல்கலைக் கழக மானியக் குழு (U.G.C.) அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கவுன்சில் (A.I.C.T.E.), கட்டடக்கலை கவுன்சில் (C.O.A.), இந்திய பார்மசி கவுன்சில் (P.C.I.), தேசிய ஆசிரியர் கல்வி கவுன்சில் (N.C.T.E.) மற்றும் ஓட்டல் மேலாண்மை சமையல் தொழில்நுட்பத்துக்கான தேசிய கவுன்சில் ஆகியவற்றுக்கு, அந்தந்த மாநில அரசுகளுடன் இணைந்து, உள்ளூரில் உள்ள கொரோனா வைரஸ் பரவல் நிலைமைகளை கருத்தில் கொண்டு முடிவெடுக்க அறிவுறுத்த வேண்டும். இது மிகுந்த அழுத்தமான இச்சூழலில், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு உரிய வெளிப்படையான நீதியை வழங்குவதாக அமையும்.

வாசிப்பை நேசிப்போம்!

வீட்டுக்கு வெளிச்சம் தருவது சாளரம்; "புத்தகங்கள் இல்லாத வீடு, சாளரங்கள் இல்லாத சத்திரம் போன்றது". நம்மை ஏமாற்றாத, சிறந்த நண்பன் புத்தகம் தான். நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு வளரும், உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும்; எண்ணங்கள் நேர் பெறும்.

நமது ஆற்றல் பெருகும், திறமைகள் மிளிரும், உற்சாகம் ஊற்றெடுக்கும், சோர்வு அகலும், மனம் நிறைவு பெறும், துணிவான முடிவுகள் எடுக்க புத்தகம் துணை புரியும்! வாழ்க்கை மேம்படும்! முன்னேற வழி காணும்..!

புத்தகங்களை படித்தவர்கள் நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தரப் போராடி உள்ளார்கள், வரலாற்றை மாற்றி எழுதி உள்ளார்கள்!

நல்ல புத்தகங்கள் நம் வாழ்வை மெருகேற்றும்

புத்தகங்கள் மட்டுமே, நமக்கு ஏற்படுகிற சிக்கல்களைத் தீர்க்க நல்ல வழியை நயம்படச் சொல்லும்.மனச் சோர்விலும், இறுக்கத்தில் உழலும் போது நல்ல புத்தகங்கள் அமைதியையும், தெளிவையும், வழிகாட்டுதலையும், ஆலோசனைகளையும் வழங்கும்.

அத்தியாவசியப் பொருட்களின் பட்டியலில் புத்தகம் இடம் பெற செய்ய வேண்டும்

நமக்கும், நமது வீட்டிற்கும் தேவையான பொருட்களை நாம் தவறாமல் வாங்குகிறோம். அதைப் போல, நமது அறிவை வளர்த்துக் கொள்ளவும், வாழ்க்கையில் முன்னேறவும் புத்தகங்களை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

புத்தகங்கள் வாங்கத் தரப்படும் பணம், செலவு அல்ல, மூலதனம் ஆகும்! அது, வட்டியை ஈட்டித் தருவதைப் போல அறிவைப் பெருக்கச் செய்யும் மூலதனம்! புத்தகங்கள் படிக்க நேரம் இல்லை என்று பெரும்பான்மையோர் கூறுகிறார்கள்.

விமானம்,பேருந்து தொடர்வண்டி பயணத்தின் போது மருத்துவரை,உயர் அலுவலர்களை, தலைவர்களைச் சந்திக்கக் காத்து கொண்டிருக்கும்போதும், புத்தகங்களை படிக்கலாம்.

நேரம் வீணாய்க் கழியாமல், பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், புத்தகப் படிப்பிற்காக தினமும் சிறிது நேரத்தை ஒதுக்கலாம்.

நம்மை உயர்த்தி கொள்ள புத்தகம் உறுதுணையாக இருக்கும்

ஆனால், நம்மை உயர்த்திக் கொள்ளப் புத்தகங்களைப் படிப்பதற்கு மட்டும் நேரம் இல்லை என்று புலம்பித் தள்ளுகின்றோம். இது வேடிக்கையானது.

எனவே, நமக்குக் கிடைக்கும் நேரத்தை வீண் அடிக்காமல் புத்தகங்களைப் படிப்போம்.

நூலகங்களுக்குச் சென்று, புத்தகங்களை எடுத்து வந்து படிக்கும் நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வோம். குழந்தைகளையும் நூலகங்களுக்கு அழைத்துச் சென்று, புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அவர்களுக்கும் ஊட்டுவோம்..

குழந்தைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்துவோம்

ஒவ்வொருவரும், புத்தகங்களை விலை கொடுத்து வாங்கி தங்கள் வீட்டில் சிறு நூலகம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நமது, குடும்பமே, வாசித்து அறிவை வளர்த்துக் கொள்ள நல்ல வாய்ப்பு ஏற்படும்.

புத்தகங்கள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைகள், அறிவு உள்ளவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும், இனிய பண்புள்ளவர்களாகவும்,நேர்மை,, நாணயம் உடையவர்களாகவும் வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களாகவும் விளங்குவார்கள்.

நல்ல புத்தகங்களைப் படித்து, கெட்டுப் போனவர்கள் யாரும் உலகில் இல்லை. புத்தகங்கள் படிப்பதைக் கடமையாகக் கொண்டவர்கள் வாசிப்பதை உயிர் என்று மதித்தவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்து உள்ளார்கள்.

புத்தகங்கள் பெற்றோரைப் போல அறிவுரை கூறும்; மனைவியைப் போலத் தாங்கி நிற்கும்; மக்களைப் போன்று மகிழ்ச்சி அளிக்கும்; நெருங்கிய நண்பனாய் ஆலோசனை வழங்கும்! ஆம்..நண்பர்களே..,

அறிவை விருத்தி செய்ய நல்ல புத்தங்களை நாளும் படிப்போம். வாசிப்பை நேசிப்போம்! வாழ்க்கையிலும் பயன்படுத்துவோம்!

❖ ❖ ❖

டெல்டா மாவட்டங்களில் 3,457.15 கி.மீ. தூர்வாரும் பணிகளுக்கு ரூ.6,724.75 இலட்சம் ஒதுக்கீடு!

தமிழகத்தை நீர்மிகை மாநிலமாக உருவாக்குவதை இலக்காக கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் விவசாயிகளின் நலனுக்காக நல்லாட்சி நடத்திவரும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கடந்த 2016ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நீர் மேலாண்மையில் தனி கவனம் செலுத்தி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் .

மாநிலம் முழுவதும் மக்களின் பங்கேற்புடன் குடிமராமத்து எனும் நீர்மேலாண்மை திட்டத்தை செயல்படுத்தி வரும் நமது முதலமைச்சர் அவர்கள், தென் மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழைக்கு முன்னதாக டெல்டா மாவட்டங்களில் உள்ள நீர் ஆதாரங்களை பாதுகாக்க நீர்நிலைகளை தூர்வாருதல் மற்றும் செப்பனிடுதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

இதன் அடிப்படையில் தமிழகத்தின் உணவு களஞ்சியமாக திகழும் நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை ஆகிய டெல்டா மாவட்டங்களில் நீர் நிலைகளை தூர்வாருதல் மற்றும் செப்பனிடும் பணிகள் பெருமளவிலும், ஏனைய மாவட்டங்களில் குடிமராமத்து பணிகளும் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் வழிகாட்டுதலுடன் ஏரி, குளம், குட்டை

காவேரி டெல்டா பகுதிகளில் போர்கால அடிப்படையில் தூர்வாரும் பணிகள்!
7 மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் கண்காணிப்பு! 809 இயந்திரங்கள்,
173 பொறியாளர்கள் களப்பணியில் தீவிரம்!
டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி!
அரசுக்கு நன்றி! – 06.06.2020

முதல் நீண்ட நெடிய கால்வாய், நீர் தேக்கங்கள் என நீர் ஆதார அமைப்பை முற்றிலும் சீரமைக்கவும், மழை நீர் துளியும் வீணாகாமல் சேமிக்கவும், தூர்வாருதல் மற்றும் செப்பனிடுதல் போன்ற பணிகள் கடந்த ஆண்டு சுமார் 2,629.85 கிலோ மீட்டர் தூரத்திற்கு செய்து முடிக்கப்பட்டது.

சுமார் 60 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் 281 பணிகளை செப்பனிட 635 இயந்திரங்களைக் கொண்டு கடந்த ஆண்டு களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு கடைமடை வரை தண்ணீர் விரைந்து செல்லும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டன. இது டெல்டா விவசாயிகளிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. வேளாண்மை பயிர் சாகுபடி மற்றும் உணவு உற்பத்தி இலக்கை விட அதிகமாகவே எய்தப்பட்டது. இந்த

பிடித்தமான நற்செயலில் ஈடுபட்டால் மனச்சோர்வு அறவே ஏற்படாது.

வெற்றியை தொடர்ந்து இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டம் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.6,724.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள்.

கரூர் மாவட்டத்தில் 42.65 கி.மீ க்கு 11 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.138 இலட்சமும், திருச்சி மாவட்டத்தில் 54.53 கி.மீ. க்கு 20 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.176.80 இலட்சமும், அரியலூர் மாவட்டத்தில் 4 கி.மீ. க்கு 1 தூர்வாரும் பணி செய்திட ரூ.16 இலட்சமும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 944.97 கி.மீ. க்கு 165 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.2,291.90 இலட்சமும்,திருவாரூர் மாவட்டத்தில் 1,244.06 கி.மீ. க்கு 106 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.2,256.55 இலட்சமும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 1,072.71 கி.மீ. க்கு 80 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.1,671.50 இலட்சமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 94.23 கி.மீ. க்கு 9 தூர்வாரும் பணிகள் செய்திட ரூ.174 இலட்சமும், மொத்தம் 3,457.15 கி.மீ. தூர்வார 392 பணிகளுக்கு ரூ.6,724.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் அதிவேகமாக நடைபெற்று வருகின்றன.

கடலூர் மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்திற்கு ரூ.200 இலட்சம் ஒதுக்கீடு செய்து 21 பணிகள் மூலம் 199.85 கிமீ. தூர்வாரிட உத்தரவிட்டுள்ளார்கள். இப்பணி ஓரிரு நாளில் துவக்கப்பட்டு 10 நாட்களில் முடித்திட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் முடிகொண்டான் ஆறு மற்றும் தேதியூர் திருமலை ராஜன் ஆறு தூர்வாரும் பணிகள்

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் முடிகொண்டான் ஆறு மற்றும் தேதியூர் திருமலை ராஜன் ஆறு தூர்வாரும் பணிகள் சிறப்பு தூர்வாரும் பணிகளை கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும், பணிகளை துரிதப்படுத்தி முடிக்கவும் 7 மாவட்டத்திற்கும் தனித்தனியாக மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, கண்காணித்து பணியை துரிதப்படுத்தி வருகின்றனர். மேலும், 7 மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள், நீர்வள ஆதாரத்துறையின் தலைமைப்பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற் பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் என 173 பொறியாளர்களும், 809 இயந்திரங்களும் களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கும்பகோணம் வட்டம், ரெட்டிபாளையம்,

முடிகொண்டான் ஆறு

பணிக்கு முன்பு

பணிக்கு பின்பு

மன அமைதி என்பது நமக்குள் தான் இருக்கிறது.

கும்பகோணம் வட்டம், செம்பியவரம்பால் கால்வாய்

பணிக்கு முன்பு

பணிக்கு பின்பு

கும்பகோணம் வட்டம், ரெட்டிபாளையம், முடிகொண்டான் ஆறு திட்டமிடப்பட்டுள்ள காலத்திற்குள் இப்பணிகளை முடிக்க தினசரி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு பணிகள் இலக்கு தவறாமல் செயல்படுத்தப்படுகிறது. நவீன செயலிகள் மூலம் தலைமைச் செயலகம் முதல் பணி நடைபெறும் இடம் வரை தங்குதடையின்றி தொடர்பும் கண்காணிப்பும் ஏற்படுத்தப்பட்டதால் இப்பணிகள் வெளிப்படையாக நடைபெறுகின்றன. பல நிலைகளில் கண்காணிப்புகள் மற்றும் கள ஆய்வுகள் மூலமாக அனைத்து பணிகளும் தரமாக செய்யப்படுகிறது. வரும் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணையில் நீர் திறப்பதற்கு முன் பணிகளை முடிக்க வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்கள். ஆகவே, தூர்வாரும் பணிகள் அனைத்தும் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

நவீன தொழில்நுட்ப வசதிகள், துல்லியமான திட்டமிடல், மக்களின் நேரடி பங்கேற்பு என வெளிப்படையாக நிகழும் இந்த பணி 100% வெற்றி மட்டுமல்ல சிறப்பான நீர் மேலாண்மையில் தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னுதாரணமாக திகழ்கிறது. மிகப்பெரிய நீர் ஆதார கட்டமைப்பை குறுகிய காலத்தில் சீரமைப்பது ஒரு சாதனையே.

விவசாயிகள் மகிழ்ச்சி! அரசுக்கு நன்றி!

எம்.கணேசன், வைரவன் கோவில் வாய்க்கால் பாசனதாரர், தஞ்சை மாவட்டம்:

“வைரவன் கோவில் வாய்க்கால் கடந்த 8 ஆண்டுகளாக தூர்வாரப்படாததால் தண்ணீர் வராமல் எங்களால் விவசாயம் செய்ய முடியவில்லை. பிழைக்க வழி இன்றி கஷ்டப்பட்டோம். இந்த வாய்க்கால் மூலம் 500 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இப்பொழுது மாண்புமிகு முதல்வர் எடப்பாடி அய்யா தூர்வாரும் திட்டத்தை கொண்டு வந்ததால் பணி சிறப்பாக முடிந்துள்ளது. மேட்டூர் அணை திறந்ததும் கடைமடை

பகுதியான எங்களுக்கு தண்ணீர் வேகமாக வந்து சேரும். குறுவை சாகுபடி செய்ய நாங்கள் தயாராக உள்ளோம். முதலமைச்சருக்கு எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.” என்றார்.

திரு. அழகர், பழைய பள்ளி ஏரி கால்வாய் (வடக்கல்) பாசனதாரர்:

“கடந்த ஆண்டு விக்கிரம ஆறு தூர்வாரும் திட்டத்தின் கீழ் சிறப்பாக தூர்வாரப்பட்டு கடைமடை வரை

அன்புக்கும், அறிவுக்கும் சமபங்கு அளிப்பவர் சமநிலை இழப்பதில்லை.

பாசன நிலங்களுக்கு தண்ணீர் வந்து சேர்ந்தது இதனால் அனைத்து விவசாயிகளும் மிகுந்த பயனடைந்தனர்.

அதுபோல, இந்த ஆண்டும் பழைய பள்ளி ஏரி கால்வாயும் தூர்வாரப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் சுமார் 850 ஏக்கர் பாசன வசதி பெறும் இப்பகுதி விவசாயிகள் பெறும் மகிழ்ச்சியில் உள்ளனர். இந்த திட்டத்தின் மூலம் இனி நாங்கள் அதிக பயன்பெறுவோம். கடைமடை விவசாயிகளான எங்களுக்கும் வாழ வழிகாட்டிய விவசாயிகளின் முதல்வர் அய்யா அவர்களுக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கையாக்குகிறோம்.'' என்றார்.

கடந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி மட்டும் 2.90 இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டு 3.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. இதன்மூலம் கடந்த ஆண்டை விட டெல்டா மாவட்டங்களில் இவ்வாண்டு அரிசி உற்பத்தி 1 இலட்சம் மெட்ரிக் டன் கூடுதலாக உற்பத்தி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கடைமடை வரை தண்ணீர் செல்ல 25 நாட்கள் ஆகும். ஆனால், தற்போது சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டத்தினால் 10 நாட்களில் தண்ணீர் கடைமடை வரை விரைந்து செல்லும். ஆகவே, டெல்டா விவசாயிகள் குறுவை நெல் சாகுபடி பணிகளை செய்வதற்கு தயார்நிலையில் மகிழ்ச்சியுடன் உள்ளனர்.

நிலவேம்பு

மூலிகை மருத்துவத்தில் பயன்படும் செடியாகும். கசப்புச் சுவையுடையதான இதன் இலையும், தண்டும் மருத்துவ குணமுடையவையாகும். இத்தாவரம் சில நோய்களையும் நோய்த் தொற்றுகளையும் குணமாக்கப் பயன்படுகிறது. இதன் முழுச் செடியும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இத்தாவரம் ஈரப்பதமும், நிழலும் உள்ள இடங்களில் 30–110 செ.மீ. உயரம் வரை வளரக் கூடியது. கரும்பச்சை நிறத்துடன் சதுர வடிவிலான தண்டுப் பகுதியுடன் காணப்படுகிறது. 8 செ.மீ. நீளமுள்ள கரும் பச்சை நிறம் கொண்ட இலைகளைக் கொண்டுள்ளது. தமிழில் ‘நிலவேம்பு’ என்பதன் அர்த்தம் தரையில் விளையும் வேம்பு என்பதாகும்.

நிலவேம்பு உபயோகிக்கும் முறை :

★ நிலவேம்பு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், சந்தனம், கோரைக் கிழங்கு (கோரைப்புல்லின் கிழங்கு), பேய்ப்புடல் (புடலங்காய் வகைத் தாவரம்), பற்படாகம் (ஒரு புல் வகையைச் சேர்ந்தது), சுக்கு, மிளகு ஆகியவற்றின் கலவையே நிலவேம்புக் குடிநீர் தயாரிப்பதற்கான மூலப்பொருள்களாகும்.

★ நிலவேம்புக் குடிநீரை, எப்போதும் சாப்பாட்டுக்கு முன் குடிப்பதுதான் சிறந்தது. அப்போதுதான் அதை முழுமையாக உடல் உட்கிரகித்துக் கொள்ளும்.

★ இது சர்க்கரை அளவை கட்டுப்படுத்த உதவுகிறது.நிலவேம்புக் குடிநீரை, இளஞ்சூடாக குடிப்பதுதான் சிறந்தது. அதுவும் தயாரித்த 3 மணி நேரத்துக்குள் குடித்து விட வேண்டும்.

★ நிலவேம்புக் குடிநீரை ஒரு நாளைக்கு 10 மி.லி. முதல் 50 மி.லி. வரை அருந்தலாம். இதில் குழந்தைகள் 10 மி.லி. சிறுவர்கள் 15 மி.லி. பெரியவர்கள் 15இல் இருந்து 50 மி.லி. வரை குடிக்கலாம். காய்ச்சல் பாதித்தவர் ஒரு நாளைக்கு மூன்று தடவை குடிக்கலாம்.

★ டெங்கு காய்ச்சலுக்கு மட்டுமின்றி, நீரிழிவு நோய்க்கும் நிலவேம்பு கசாயம் அருமருந்தாக விளங்குகிறது.

★ அடிக்கடி தலைவலி ஏற்படும் பிரச்சினை உள்ளவர்கள் தினம் இரண்டு வேளை இந்த கசாயத்தை குடித்து வந்தால், தலையில் நீர்க்கட்டு குறைந்து, தும்மல், இருமல் போன்ற பாதிப்புகளும் கூட சரியாகும்.

★ காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் காலை, மாலை என இரு வேளைகள் 30 மில்லி நிலவேம்பு கசாயத்தை தொடர்ந்து ஒரு வாரத்துக்கு குடித்து வந்தால் விரைவாக குணமடையலாம்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் ரூ.3.25 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் 3 கோடியே 25 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மக்களைத் தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை, எளிய மக்களிடையே முறையாகக் கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
> சென்னை, தலைமைச் செயலகத்தில் 14.07.2020 அன்று
> காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி கோட்டத்திற்கு புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.07.2019 அன்று சட்டப்பேரவை விதி எண் 110இன் கீழ் அறிவித்தார்கள்.

அதன்படி, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் 2 கோடியே 75 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

நம்பிக்கையும், தைரியமும் வெற்றி கிரீடத்தின் இரு ஒளிமிகு வைரங்கள்.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள www.tnpowerfinance.com என்ற புதிய வலைதளம் மற்றும் "TNPFCL" கைப்பேசி செயலி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ள www.tnpowerfinance.com என்ற புதிய வலைதளத்தையும், "TNPFCL" என்ற கைப்பேசி செயலியையும் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான பொதுத்துறை நிறுவனமாக தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனமாக (வைப்பீடு) 1991ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்டது. இந்நிறுவனம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் உள் கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனம் பொதுமக்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வைப்பீடுகள் மூலம் நிதி திரட்டி வருகிறது. மேலும், இந்நிறுவனம் பொது நிதி நிறுவனமாக பத்து இலட்சத்திற்கும் மேலான வைப்பீட்டாளர்களுக்கு பொதுத்துறை வங்கிகளை விட அதிக வட்டியை அளித்து வருகிறது.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தால் வைப்பீட்டாளர்களின் நலனிற்காக, அதன் செயல்பாடுகளை தகவல் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தி online மூலமாக செயல்படுத்திடும் வகையில், www.tnpowerfinance.com என்ற புதிய வலைதளமும், "TNPFCL" என்ற கைப்பேசி செயலியும் உருவாக்கப்பட்டுள்ளது. இப்புதிய வலைதளத்தையும், கைப்பேசி செயலியையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். மேலும், இப்புதிய வலைதளத்தின் மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திலுள்ள 8,000 பயனாளிகளுக்கு 30 கோடி ரூபாய் நிதியை வழங்கினார்கள்.

இப்புதிய வலைதளத்தின் மூலம், வைப்பீட்டாளர்கள் வைப்பீட்டு கணக்கை துவக்குதல், புதுப்பித்தல், முதிர்வடைந்த

வைப்பீட்டு தொகையை பெறுதல், வைப்பீட்டு தொகையின் மூலம் கடன் பெறுதல், Nominees பெயர் மாற்றம் செய்தல், வங்கி விவரங்களை புதுப்பித்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்ள முடியும்.

மேலும், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்கள் 5 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.

அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் உறுப்பினராக பதிவு செய்ய இணையதள சேவை!

தமிழகத்தில் அமைப்புசாரா தொழிலாளர்கள் நலன்களை பாதுகாப்பதற்காக தமிழ்நாடு தொழிலாளர் துறையின் கீழ் 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் இயங்கி வருகின்றன. இந்த வாரியங்களில் தொழிலாளர்கள் தங்களை உறுப்பினர்களாக பதிவு செய்யும் பொருட்டு மாவட்ட அளவிலான தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்களுக்கு இதுவரை நேரடியாக செல்ல வேண்டியிருந்தது. கொரோனா வைரஸ் நோய் சமூகப் பரவலைத் தடுக்கும் பொருட்டும் தனி மனித இடைவெளியை பராமரிக்கும் பொருட்டும், தமிழகத்தில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தொழிலாளர்கள் தங்களை பதிவு செய்ய மாவட்ட அலுவலகங்களுக்கு நேரடியாக செல்வதில் சிரமம் ஏற்பட்டு வந்தது. இந்த சிரமத்தைப் போக்கும் விதமாக தொழிலாளர்கள் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே இணையதளம் (Online) மூலம் **https://labour.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் மேற்படி 17 வாரியங்களிலும் தங்களது பெயர்களை உறுப்பினர்களாக பதிவு செய்து கொள்ளும் வசதி தொழிலாளர் துறையால் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்
ரூ.381.76 கோடி மதிப்பீட்டில் மருத்துவக் கல்லூரி

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
> 04.07.2020 அன்று, தலைமைச் செயலகத்தில்,
> புதிதாக கட்டப்படவுள்ள கள்ளக்குறிச்சி
> அரசு மருத்துவக் கல்லூரிக்கு காணொலிக் காட்சி
> மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 04.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சிறுவாங்கூர் கிராமத்தில் 381 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் கீழ், 7 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில், கடந்த 2017–2018ஆம் கல்வியாண்டில் புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், 2019–2020ஆம் கல்வியாண்டில் கரூரில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் கரூர் அரசு மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்பட்டன. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செயல்பட்டு வந்த ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரியானது 2019–2020ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் நிதியுதவியுடன், கடந்த 2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று சரித்திர சாதனையை படைத்துள்ளது.

அதன்படி, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி மற்றும்

2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று சரித்திர சாதனையை படைத்துள்ளது.

திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அந்த வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், சிறுவாங்கூர் கிராமத்தில் 8.328 ஹெக்டேர் நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய அரசு மருத்துவக் கல்லூரி நிறுவிட, 381 கோடியே 76 இலட்சம் ரூபாய் அனுமதித்து நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசு 60 விழுக்காடு பங்களிப்பாக 195 கோடி ரூபாய் நிதியும், தமிழ்நாடு அரசு 40 விழுக்காடு பங்களிப்பாக 186 கோடியே 76 இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கும். அதில் முதல்கட்டமாக தமிழ்நாடு அரசால் 110 கோடி ரூபாய் நிதியும், மத்திய அரசால் 50 கோடி ரூபாய் நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் 132 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் 182 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குடியிருப்பு மற்றும் விடுதிக் கட்டடங்கள் போன்றவை 66 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும். கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி 150 எம்.பி.பி.எஸ். இடங்களுடன் நிறுவப்படும்.

மேலும், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநரகத்தின் சார்பில், திருநெல்வேலி மாவட்டம் – நெட்டூரில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்;

அரியலூர் மாவட்டம் – கல்லங்குறிச்சி, தருமபுரி மாவட்டம் – பேளாரஅள்ளி, சிவகங்கை மாவட்டம் – திருப்பாச்சேத்தி, தஞ்சாவூர் மாவட்டம் – காசாங்காடு மற்றும் கதிராமங்கலம், தேனி மாவட்டம் – பு. தர்மத்துப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – மேலதேவநல்லூர், திருப்பூர் மாவட்டம் – வெள்ளிரவெளி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 4 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

பெரம்பலூர் மாவட்டம் – அம்மாபாளையத்தில் அமைந்துள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம் – பந்தநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம்; பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

என மொத்தம் 7 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

நம் மண்ணில் விளையும் பழங்கள், ஒவ்வொரு சீசனிலும் அதிகம் விளையும் காய்கறிகள் மற்றும் பழங்களை சாப்பிடுங்கள். இவை அந்தந்த பருவத்தில் வரும் நோய்களிலிருந்து நம்மைக் காப்பவைகளாகும்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் ரூ.248.53 கோடி மதிப்பீட்டில் 20 பாலங்கள், மேம்படுத்தப்பட்ட சாலைகள் மற்றும் 2 அலுவலகக் கட்டடங்கள்

● ரூ.28.99 கோடி மதிப்பீட்டில் வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில் முடிவுற்ற பணிகளை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தும், வாகன சுரங்கப்பாதைக்கு அடிக்கல்லும் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில், உத்திரமேரூர், வந்தவாசி, வெம்பாக்கம், செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களுக்குட்பட்ட காஞ்சிபுரம் முதல் வந்தவாசி வரை மற்றும் சட்ராஸ் முதல் செங்கல்பட்டு வரையிலான 217 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட சாலையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், பெரம்பலூர், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், மதுரை, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் 31 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 பாலங்கள் மற்றும் 2 அலுவலகக் கட்டடங்களையும் திறந்து வைத்து, செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டையில் 28 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதைப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்தும், பெருகிவரும் போக்குவரத்து தேவைக்கேற்ப சாலைகளின் கொள்ளளவை அதிகரிக்கவும், பாதுகாப்பான பயணத்தினை உறுதிசெய்யவும், மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுதல், தேவையான பகுதிகளில் தரமான சாலைகளை அமைத்தல், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரித்தல் போன்ற பணிகளை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில், உத்திரமேரூர், வந்தவாசி, வெம்பாக்கம், செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் வட்டங்களுக்குட்பட்ட, காஞ்சிபுரம் முதல் வந்தவாசி (மாநில

நெடுஞ்சாலை 116) கிலோ மீட்டர் 14/300–36/700 மற்றும் சட்ராஸ் முதல் செங்கல்பட்டு (மாநில நெடுஞ்சாலை 58) கிலோ மீட்டர் 0/0–26/811 வரையிலும், 217 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட சாலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், எழுமூர் – மழவராயநல்லூர் சாலையில், எழுமூரில் 1 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கொளக்காநத்தம் – சிறுகன்பூர் சாலையில், கொளக்காநத்தத்தில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 பாலங்கள்;

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், பெருமநாடு – கொன்னையூர் சாலையில் பிரிந்து ஆத்தங்காடு – திருநட்டாம்பட்டி சாலையில், ஆத்தங்காட்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருமயம் வட்டம், திருமயத்தில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குளத்தூர் வட்டம், கீரனூரில் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 2 உட்கோட்டம் மற்றும் பிரிவு அலுவலகக் கட்டடங்கள்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், குரவப்புலம் – கருப்பம்புலம் கடினல்வயல் சாலையில், கருப்பம்புலத்தில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், பஞ்சநதிக்குளம் நடுசேத்தி சாலையில், மருதூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆயக்காரன்புலம் – பன்னாள் சாலையில், ஆயக்காரன்புலத்தில் 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள்;

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், குறவன்குளம் சாலையில் குறவன்குளத்தில் 1 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பெரும்செல்வவிளை சாலையில், பெரும்செல்வவிளையில் 1 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் வட்டம், கயத்தார் – கழுகுமலை சாலையில், தெற்கு இலந்தைகுளத்தில் 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், விளாத்திக்குளம் வட்டம், புதூர்–பரளச்சி சாலையில், வன்னிப்பட்டியில் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், எட்டயபுரம் வட்டம், மீனாட்சிபுரம் – வெங்கடாசலபுரம் சாலையில் வெங்கடாசலபுரத்தில் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 பாலங்கள்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சங்கரன்கோவில் – வீரசிகாமணி சாலையில், தளவாய்புரத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், இராஜபாளையம் – சங்கரன்கோவில் – திருநெல்வேலி சாலையில் பிரிந்து செல்லும் கரிசல்குளம் சாலை (வழி) ரெட்டியபட்டி – பந்தப்புளி சாலையில், கிலோ மீட்டர் 1/10–ல் பந்தப்புளியில் 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் கிலோ மீட்டர் 4/6–ல் கரிசல்குளத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மாங்குடி சாலையில் மாங்குடியில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கரிவலம்வந்தநல்லூர் – உள்ளார் சாலையில், கரிவலம்வந்தநல்லூரில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருவேங்கடம் வட்டம், நடுவப்பட்டி – கொளக்கட்டாகுறிச்சி சாலையில், நடுவப்பட்டியில் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சிவகிரி வட்டம், அம்மன்குளம் காட்டூர் சாலையிலிருந்து நெற்கட்டும் செவல் வரை செல்லும் சாலையில், தலைவன் கோட்டையில் 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் ராயகிரி – மேற்கு தொடர்ச்சி மலை சாலையில், உள்ளாரில் 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கடையநல்லூர் வட்டம், நகரம் – சங்கரன்கோவில் சாலையில், வடமலாபுரத்தில் 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 9 பாலங்கள்;

என மொத்தம் 248 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 பாலங்கள், மேம்படுத்தப்பட்ட சாலை மற்றும் 2 அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரம் வட்டம், குரோம்பேட்டை, இராதா நகரில் 28 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவு எண் 27–க்கு மாற்றாக இரயில்வே கி.மீ. 25/3–4இல் கட்டப்படவுள்ள வரையறுக்கப்பட்ட வாகன சுரங்கப்பாதைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

பால், தயிர், மோர், நெய், வெண்ணெய் என பால் உணவுகளை அதிகம் சாப்பிடுங்கள். இவற்றில் உள்ள ப்ரோபயாட்டிக், நம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

படமும் / செய்தியும்

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் கலந்தாய்வு!

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் 17.06.2020 அன்று காணொலிக் காட்சி மூலமாக மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக கலந்தாய்வு மேற்கொண்டார்கள். இந்த கலந்தாய்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K. திரிபாதி, இ.கா.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

படமும்/செய்தியும்

உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் ரூ.13.62 கோடி மதிப்பீட்டிலான கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் திருப்பூர் மாவட்டம் – தாராபுரத்தில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையக் கட்டடம் மற்றும் திருப்பூர் மாநகரில் கட்டப்பட்டுள்ள காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், புதியதாக கட்டப்பட்டுள்ள 17 காவலர் குடியிருப்புகள், 5 காவல் நிலையங்கள், 5 காவல்துறை கட்டடங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடம் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

61,000க்கும் மேற்பட்டோருக்கு யோகா மற்றும் இயற்கை மருத்துவச் சிகிச்சை

மாண்புமிகு அம்மாவின் அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கொரோனா நோய்த் தொற்றை கட்டுப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆங்கில மருத்துவ சிகிச்சையுடன் சித்தா மற்றும் யோகா சிகிச்சைகளும் அளிக்கப்படுகிறது.

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோருக்கு நுரையீரல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்கள் தொடர்ந்து மூச்சுப் பயிற்சிகளை மேற்கொண்டால் நுரையீரலின் செயல்திறன் அதிகரித்து சுவாசப் பாதைகள் சீராகும். மேலும், நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க எளிய முறையிலான சில ஆசனங்களும் வழி வகுக்கிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழகம் முழுவதும் கொரோனா நோயாளிகள் சிகிச்சை பெறும் இடங்களுக்கே சென்று இப்பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதனைத் தவிர, மூலிகை பானங்கள், நவதானிய வகைகள், சிறு தானியங்கள், உள்ளிட்ட ஆரோக்கிய உணவுகளும், நீராவி பிடித்தல், சுவாசத்திற்கான நறுமணச் சிகிச்சைகளும் (Aroma Therapy) அளிக்கப்படுகிறது. இப்பணிகளில் 200–க்கும் மேற்பட்ட அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவத்துறை மருத்துவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனை, வட்ட மருத்துவமனை, கொரோனா சிகிச்சை மையங்கள் என 86 இடங்களில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதன் மூலம் இதுவரை 61,000–க்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர். தேவையின் அடிப்படையில் இச்சிகிச்சை முறைகள் மேலும் விரிவுபடுத்தப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இதுபோன்ற மக்கள் நலன் காக்கும் நடவடிக்கைகள் தமிழகத்தில் கொரோனா தடுப்பு மற்றும் சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்துவதாக அமையும்.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

அரிசி, கோதுமை உணவுகளைக் குறைத்து, சிறுதானிய உணவுகள் அதிகம் சாப்பிடுங்கள். உணவில் உளுந்து, பருப்பு வகைகள், முளைகட்டிய தானியங்கள் அதிகம் இருக்கட்டும்.

முழு ஊரடங்கு அமலில் உள்ள நெருக்கடியான சூழ்நிலையிலும், ஆவின் நிறுவனம் மக்களுக்கு மகத்தான முறையில் சேவை ஆற்றி வருகிறது!

"ஆவின்" எனும் வணிகப் பெயர் கடந்த நாற்பது ஆண்டுகளாக தமிழகத்தின் அனைத்து குடும்பங்களிலும் பிரபலமாக உச்சரிக்கப்பட்டு வரும் பெயராக உள்ளது. கிராம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம், மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்றடுக்கு கட்டமைப்பில் ஆவின் நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் 4.5 இலட்சம் பால் வழங்கும் உற்பத்தியாளர்கள் மூலம் தமிழகத்தில் நாளொன்றுக்கு 39 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 25 இலட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் உற்பத்தியில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

சென்னையில் நாளொன்றுக்கு சராசரியாக 13 இலட்சம் லிட்டர் பாலும் தமிழகத்தின் பிற பகுதிகளில் 11.60 இலட்சம் லிட்டர் பாலும் விற்பனை செய்யப்படுகிறது. பால் விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்தின் அடிப்படையில் சென்னை மாநகர் பகுதி மட்டுமின்றி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாதாந்திர பால் அட்டை விற்பனை செய்யப்பட்டுவருகிறது. அனைத்து ஒன்றியங்களிலும் விற்பனை மேலாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அவர்கள் மூலமாக அனைத்து உணவகங்கள், சூப்பர் மார்க்கெட்டுகள், தேனீர் விடுதிகள் மற்றும் மளிகை கடைகள் ஆகிய இடங்களில் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சென்னை தவிர பிற மாவட்டங்களில் ஆவின்

பால் விற்பனையானது 30.06.2020 அன்று இதுவரை கண்டிராத உயர்ந்த அளவாக 12.03 இலட்சம் லிட்டர் என்ற புதிய இலக்கினை எட்டியுள்ளது.

கொரோனா தாக்கத்தின் காரணமாக தமிழகம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும், தொடர்ந்து பால் வழங்கும் பொருட்டு, தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் பால் மற்றும் பால் பொருட்கள் தங்குதடையின்றி உரிய நேரத்தில் கிடைத்திட, பொதுமக்களுக்கு தேவைப்படும், இடங்களில் தற்காலிகமாக ஆவின் கடைகள் அமைத்தும் நடமாடும் பாலகங்கள் ஏற்படுத்தியும் பால் விற்பனை ஆவின் நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

ஆவின் பால் மற்றும் பால் உபபொருட்கள் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி கிடைத்திட ஏதுவாக அதிகப்படியான எண்ணிக்கையில் சில்லறை விற்பனையாளர்கள் ஆவின் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பால் அட்டை விற்பனையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொடர் நடவடிக்கைகளின் காரணமாக தமிழகம் முழுவதும் கடுமையான கொரோனாத் தொற்று உள்ள நெருக்கடியான இக்காலகட்டத்திலும் சென்னை மற்றும் தமிழகமெங்கும் தினசரி ஆவின் பால் விற்பனை அளவு 22.50 இலட்சம் லிட்டரில் இருந்து 25 இலட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. அதை போலவே பால் பொருட்களின் விற்பனையும் நாள்தோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது.



பொதுமக்கள் தங்களின் அத்தியாவசிய தேவைக்காக, மளிகை பொருட்கள் கொள்முதல் செய்யும் மளிகை கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகள் ஆகிய இடங்களிலிலும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைத்திட ஏதுவாக ஆவின் முகவர் நியமன விதிகளில் ஆவின் நிறுவனம் மாற்றம் செய்துள்ளது. மேலும் இதற்கான வைப்புத் தொகை ரூ.1,000/– ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகம் முழுவதும் 495 புதிய விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசின் வழிகாட்டுதலின்படி கொரோனா நோய்த் தடுப்பு காலத்தில் தேவையான சத்துள்ள பால் கிடைக்கும் வண்ணம் அனைத்து பகுதிகளிலும் முகவர்களை நியமித்து ஆவின் நிறுவனம் மக்களுக்கு சேவையாற்றி வருகிறது.

மேலும் கடந்த ஆண்டு சுமார் 5,800 கோடி விற்று முதல் (Turn Over) செய்துள்ளது. ஆவின் நிறுவனம், மேலும் அதனை அதிகரிக்க தக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த புதிய உயரத்தை அடைய ஒத்துழைப்பு நல்கிய அனைத்து கிராமப்புற பால் உற்பத்தியாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள், மொத்த பால் விற்பனையாளர்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், அனைத்து மாவட்ட கூட்டுறவு துணைப் பதிவாளர்கள், ஆணையாளர் அலுவலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும், மாவட்ட கூட்டுறவு ஊழியர்கள், இணைய பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள், ஏனைய ஒப்பந்த பணியாளர்கள், வாகன ஒப்பந்ததாரர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் ஆவின் நிறுவனம் தெரிவித்துக்கொள்கிறது. மேலும், வரும் காலங்களிலும், பால் உற்பத்தியாளர்களுக்கும் மற்றும் நுகர்வோர்களுக்கும் கூடுதல் சேவைகள் செய்ய ஆவின் நிறுவனம் தயாராக உள்ளது என்பதனை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறது.

ஆவின் நிறுவனத்தின் 24 மணிநேர நுகர்வோர் சேவை பிரிவு தொலைபேசி எண்: 7358018430; 044–23464575, 23464579, 23464578 மின்னஞ்சல்: aavincomplaints@gmail.com மூலம் முகவர் நியமனம் மற்றும் பால் அட்டைகளைப் பொதுமக்கள் எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் சார்பில் நாமக்கல்லில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பயோ-கேஸ் தொழிற்சாலையின் உற்பத்தி பணி மற்றும் 5 பயோ-கேஸ் சில்லறை விற்பனை நிலையங்கள் துவக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்தும் மாண்புமிகு மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் எஃகு துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்கள் புதுடில்லியிலிருந்தும் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள் (23.06.2020)

DEDICATION AND INAUGURATION OF "CBG PLANT AND CBG STATIONS IN TAMIL NADU" - 23.06.2020

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் உரை.*

Hon'ble Shri. Dharmendra Pradhan ji,

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களே,

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் அவர்களே,

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே,

Secretary to Government of India,

Ministry of Petroleum and Natural Gas,

Indian Oil Corporation Chairman அவர்களே,

எரிசக்தித் துறை செயலாளர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களே மற்றும் நிகழ்ச்சியில் பங்கு பெற்றுள்ள அலுவலர்களே வணக்கம்.

I am happy to inaugurate the Compressed Bio Gas Plant at Namakkal in the presence of the Hon'ble Union Minister Shri Dharmendra Pradhan Ji.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தில் சார்பில் நாமக்கல்லில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் Compressed Bio Gas உற்பத்திப் பணிகளுக்கான இயந்திரத்தையும், நாமக்கல், சேலம், புதுச்சத்திரம் மற்றும் இராசிபுரம் ஆகிய இடங்களில் ஐந்து CBG சில்லறை விற்பனை நிலையங்களையும் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் ஜெர்மனி நாட்டின் ஆயில் டாக்கிங் நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் கூட்டு முயற்சி நிறுவனமான IOT உள்கட்டமைப்பு மற்றும் எரிசக்தி சேவைகள் நிறுவனம், நாமக்கல்லில் 34 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு 2.4 மெகா வாட் திறன் கொண்ட பயோ கேஸ் உற்பத்தி செய்து வருகிறது. இந்நிறுவனம் தயாரிக்கும் Bio Gas–லிருந்து Compressed Bio Gas (CBG) தயாரிக்கும் வகையில் புதிய தொழிற்சாலைக்கு 25 கோடி ரூபாய் செலவில் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்புதிய தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 15 டன் Compressed

Bio Gas (CBG) மற்றும் 20 டன் உயிர் உரங்கள் (Bio-manure) தயாரிக்கப்படும்.

தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனில் முதலிடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் மொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் நிறுவுதிறன் 15 ஆயிரத்து 876 மெகாவாட் ஆகும். இதில், நீர்மின் நிலைய நிறுவுதிறன் இரண்டாயிரத்து 322 மெகாவாட் ஆகவும், காற்றாலை மின் நிறுவுதிறன் 8 ஆயிரத்து 523 மெகாவாட் ஆகவும், சூரிய ஒளி மின்சக்தி நிறுவுதிறன் 4 ஆயிரத்து 54 மெகாவாட் ஆகவும், தாவரக்கழிவு மின் நிறுவுதிறன் 266 மெகாவாட் மற்றும் இணைமின் உற்பத்தி மின் நிறுவுதிறன் 711 மெகாவாட் ஆகும்.

தமிழ்நாட்டில் எரிவாயு சுழலி மின்நிலையங்களின் மொத்த நிறுவுதிறன் 1,013 மெகாவாட். இதில் மாநிலத்திற்கு 516 மெகாவாட்டும், தனியாருக்கு 497 மெகாவாட்டும் சொந்தமானதாகும்.

சென்னையில் அதிகரித்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இரண்டு கூட்டு சுழற்சி முறையிலான எரிவாயு சுழலி மின் திட்டத்தினை சென்னையை சுற்றியுள்ள பகுதியில் தமிழ்நாடு அரசால் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

Indian Oil Corporation Limited, a premier Public Sector Undertaking under Ministry of Petroleum and Natural Gas has established this Compressed Bio Gas production facilities at Namakkal.

I am grateful for the support of Hon'ble Minister Dharmendra Pradhan ji in leading this initiative.

I wish that more such steps will be undertaken in Tamil Nadu and my Government will support such steps of Government of India for clean energy.

I once again thank you for this opportunity.

நன்றி! வணக்கம்!

ஜூலை 17 : தியாகிகள் தினம்

கோட்டையிலே மூவண்ணக் கொடியை பறக்க விட்டவர் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம்

கொடியின் அடியில், "இன்றிலிருந்து இந்தியா சுதந்திரத்தைச் சுவாசிக்கிறது" என்று கொட்டை எழுத்துக்களில் எழுதினார்.

ஜனவரி 25 மாலை மணி 7. தான் தயாரித்த மூவண்ணக் கொடியை மடித்து இடுப்பில் சுற்றிக் கொண்டார். காக்கி அரைக்கால் சட்டையை இடுப்பில் சுற்றியிருந்த கொடி மறையும்படி அணிந்து கொண்டார். இராணுவ வீரர்களுக்குத் தெரியாமல், காக்கி உடையில் பின் தொடர்ந்தார்.

படைவீரர்களுக்குப் பின்னாலேயே, தென்புறவாயில் வழியாக, கோட்டைக்குள் நுழைந்து விட்டார் பாஷ்யம்.

கோட்டைக்குள் நுழைந்த பாஷ்யம், இருண்ட வழியாகக் கொடிக் கம்பம் அருகே வந்து சேர்ந்தார்.

தரை மட்டத்திலிருந்து 140 அடி உயரம். குறுக்கு அளவு 3 அடி. அதற்கு மேல், கொடி மரம். உச்சி வரையில் 60 அடி. இதன் குறுக்கு அளவு குறைவு. எல்லாவற்றையும் கூர்ந்து பார்த்துவிட்டு, செயலில் இறங்கினார் பாஷ்யம்.

கொடிமரத்தின் இரும்பு ஏணிப்படிகளில் ஏறலானார். சுமார் 50 அடி உயரம் ஏறிவிட்ட நிலையில் தன் மேல் பட்ட திடீர் வெளிச்சம் கண்டு திடுக்கிட்டார். ஆனால், வெளிச்சம் மறுகணமே மறைந்தது. அது, அருகில் உள்ள உச்சநீதிமன்றக் கோபுர லைட் ஹவுஸின் சுழல் வெளிச்சம். சுழல் வெளிச்சத்திற்குக் கண்ணாமூச்சி காட்டியவாறு கம்பத்தின் முதல் பகுதியை, அதாவது 140 அடியை அடைந்தார். இன்னும் 60 அடி மட்டுமே. இனி ஏறுவதற்குப் படிகள் இல்லை! வழவழப்பான கம்பம். குரங்கைப்போல் ஏறினார். உச்சியை அடைந்தாகி விட்டது. இடுப்பில் சுற்றி வைக்கப்பட்டிருந்த மூவண்ணக் கொடியை எடுத்துப் பிரித்து, எஃகுக் கம்பத்தில் இறுகக் கட்டினார். தாயின் மணிக்கொடி பறக்கத் தொடங்கியது!

ஏறியதை விட, கீழிறங்குவது கடினமாக இருந்தது.

1932 ஜனவரி 26 அதிகாலை, நகரத்து மக்களில் பலர் அந்த அதிசயத்தைக் கண்டனர்; பரவசம் அடைந்தனர்.

– விடுதலை வேள்வியில் தமிழகம் எனும் நூலிலிருந்து...

தமிழக விவசாயிகள் இலவச மின்சாரம் பெறவேண்டும் என்ற நிலையான கொள்கையை தமிழ்நாடு அரசு கொண்டுள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் மாண்புமிகு மத்திய எரிசக்தி, புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) திரு. **ராஜ் குமார் சிங்** அவர்களை சந்தித்த போது, மின்சாரத் துறை தொடர்பான கோரிக்கை மனுவினை அளித்தார்கள் (08.07.2020).

இந்தியாவிலேயே தமிழகத்தில் பன்முகப்படுத்தப்பட்ட மின்சார உற்பத்தி பிரிவுகள் அதிகம் உள்ளன. இங்குள்ள மின்சார நிறுவுதிறனில் புதுப்பிக்கப்படத்தக்க மின்உற்பத்தி 49.47 சதவீதம் பங்களிப்பை அளிக்கிறது. புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைத்தல், இடைக்கால மற்றும் நீண்டகால மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை ஏற்படுத்துதல், புதுப்பிக்கத்தக்க மின்சார ஆதார விரிவாக்கம் போன்றவற்றின் மூலம் தமிழகத்தில் 2011ஆம் ஆண்டில் இருந்து 15,410 மெகாவாட் மின்நிறுவுதிறன் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அனைத்து தரப்பிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

தமிழக அரசின் மிகப்பெரிய முயற்சிகள் மூலம் தற்போது தமிழகம் மின்மிகை மாநிலமாக உள்ளது. இந்த நிலை தொடர்வதற்கு உங்களின் ஆதரவைக் கோருவதோடு சில முக்கிய பிரச்சினைகளை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். மின்சார சட்ட திருத்த வரைவு மசோதாவில் உள்ள தமிழகத்துக்கு கவலையளிக்கும் சில அம்சங்கள் பற்றிய கருத்துகளை அரசு ஏற்கெனவே கூறியுள்ளது.

மின்மிகை மாநிலம்

தமிழக விவசாயிகள் இலவச மின்சாரம் பெற வேண்டும் என்பதில் நிலைத்த கொள்கையை தமிழக அரசு கொண்டுள்ளது. இது தொடர்ந்து நீடிக்க வேண்டும். எனவே மின்சாரத்துக்கு பதிலாக மத்திய அரசின் நேரடி பணப்பகிர்வு (டி.பி.டி.) கொள்கையை விவசாயப் பிரிவில் சேர்க்கக்கூடாது.

வீடுகளுக்கு 100 யூனிட் மின்சாரம் இலவசம்

அனைத்து வீட்டு மின்சார நுகர்வோருக்கும் 100 யூனிட் மின்சாரத்தை தமிழக அரசு இலவசமாக வழங்கி வருகிறது. இந்த திட்டங்களுக்கான மானியத்தை தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்துக்கு (டான்ஜெட்கோ) அரசு நேரடியாக வழங்குகிறது. எனவே டி.பி.டி. முறைக்கு இந்த திட்டமும் கொண்டு வரப்படக்கூடாது. மானியங்களை வழங்குவது மாநில மின்சார ஆணையத்தின் அனுமதியின் பெயரில் தான் மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் மானியம் வழங்குவது, மாநில அரசின் பரிசீலனைக்கே விடப்பட்டுள்ளது.

இந்த மசோதாவில், தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் ஷரத்து இடம் பெற்றுள்ளது. இதனால், மின்சாரத்தை நீண்ட தூரம் கொண்டு வந்து பகிர்ந்தளிக்கும் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களின் நலன் பாதிக்கப்படுவதோடு, ஊதியம் அளிப்பது தொடர்பான பிரிவுகளை தனியாரே எடுத்துக்கொள்ள வழிவகை செய்கிறது.

தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு புனல் மின்சார கொள்முதல் பொறுப்புகளை தனியாக நிர்ணயிப்பதை ஏற்க முடியாது. பருவ காலங்களை நம்பியே தமிழகத்தில் புனல் மின்சார உற்பத்தி இருக்கிறது. அது மின் விநியோக நிறுவனங்களின் வசத்தில் இல்லை.

அதுபோல புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை கொள்முதல் செய்வதில் (ஆர்.பி.ஓ.) ஒட்டுமொத்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்றுதான் நிர்ணயிக்க வேண்டுமே தவிர, சூரிய மின்சக்தி, சூரிய மின்சக்தி அல்லாதவை, புனல் மின்சக்தி எனத் தனித்தனியாக நிர்ணயிக்கக்கூடாது. விவசாயத்துக்கு என்று தனியான மின்னூட்டிகளை (பீடர்கள்) பிரிக்கக்கூடாது. இது விவசாயிகள் மத்தியில் அமைதியை குலைக்கும். மாறாக, பம்பு செட்களுக்கு மின்சாரம் அளிக்கும் கிரிட்களை சூரிய மின்சக்திக்கு உட்படுத்தலாம். இதற்கு மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை 100 சதவீத மானியம் வழங்க வேண்டும்.விவசாய மின் மோட்டார்களுக்கு 100 சதவீத மானியத்துடன் தனியாக சூரிய மின்சக்தி தொடரமைப்புகள் மூலம் இணைப்பு வழங்கலாம். நிலுவைத் தொகைகளை வழங்கும் வகையிலான ரூ.90 ஆயிரம் கோடி தொகுப்பு திட்டத்தை வரவேற்கிறோம். டான்ஜெட்கோ கோரியுள்ள ரூ.20,622 கோடி நிதியுதவியை வட்டிச்சலுகையுடன் வழங்க வேண்டும்.

மறுசீரமைக்கப்பட்ட துரிதப்படுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீர்திருத்த திட்டத்தின் பிரிவு–ஏ திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய ரூ.268.86 கோடியையும் பிரிவு–பி திட்டத்தின் கீழ், கடனாக வழங்க வேண்டிய ரூ.1,330. 93 கோடியையும் மானியமாக வழங்க வேண்டும்.

தமிழகத்தில் மின் வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு நாளொன்றுக்கு 72 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுக்கு நிலக்கரி தேவையாக உள்ளது. ஓராண்டுக்கு நிலக்கரி நிறுவனத்துடனான ஒப்பந்தப்படி 21.291 மில்லியன் டன் நிலக்கரி வழங்கப்பட வேண்டும். ஆனால், 20.445 மில்லியன் டன் நிலக்கரி மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இதையும் அண்மைக் காலமாக குறைத்து 18.791 மில்லியன் டன் நிலக்கரி மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பழைய அளவான 20.445 மில்லியன் டன் நிலக்கரி வழங்க வேண்டும்.

தமிழகத்தின் முக்கியமான அனல் மின் நிலையங்களாக வடசென்னை, மேட்டூரில் இரண்டு அலகுகளுக்கும் நிலக்கரி உயர்த்தி வழங்க வேண்டும். அனல் மின் நிலையங்களுக்கே நேரடியாக நிலக்கரியைக் கொண்டு சேர்க்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் சூரிய மின்சக்தி திட்டத்தை அமல்படுத்தும் பணியை தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மேற்கொண்டு வருகிறது. சூரிய மின்சக்தி திட்டத்தைச் செயல்படுத்திய வகையில், மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சகத்திடம் இருந்து தமிழகத்தின் எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு ரூ.50.88 கோடி மானியத்தொகை பாக்கி உள்ளது. இதை விரைந்து விடுவிக்க வேண்டும்.

தமிழகத்தின் சார்பில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் அனைத்தையும் விரைந்து நிறைவேற்றித் தரவேண்டும்.

நோயின்றி நலமுடன் வாழ...

சுண்டைக்காய் சிறிதாக இருந்தாலும் இதில் அதிக மருத்துவகுணம் உள்ளது. இதில் வைட்டமின் பி மற்றும் சி சத்து அதிகம் உள்ளது. சுண்டைக்காயின் இலைகள், வேர், கனி, முழுத்தாவரமும் மருத்துவகுணம் உடையது.

சுண்டைக்காயில் புரதம், கால்சியம், இரும்புச்சத்து நிறைந்துள்ளன. குழந்தைகளுக்கு ஏற்படும் ஊட்டச்சத்து பற்றாக்குறையைப் போக்க சுண்டைக்காய் உதவுகிறது. சுண்டைக்காயின் அற்புதம் என்னவென்றால் இந்தக் காயை பச்சையாகவும், காய்ந்த பின்பும் பயன்படுத்தலாம்.

சுண்டைக்காயின் பயன்கள் :

- சுண்டைக்காயில் உள்ள கசப்புத்தன்மை இரத்தத்தை சுத்தம் செய்வதோடு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகப்படுத்துகிறது.
- புளித்த ஏப்பம், உடல்சோர்வு, மூட்டுவலி போன்றவற்றை குணப்படுத்த சுண்டைக்காய் சிறந்த மருந்து ஆகும்.
- சுண்டைவற்றல் சூரணத்தை தினம் ஒரு தேக்கரண்டி மோரில் கலந்து சாப்பிட்டு வந்தால் வயிறு சம்பந்தப்பட்ட நோய்களில் இருந்து விடுபடலாம்.
- குடல்புழுக்களை அழிப்பதற்கு சுண்டைக்காய்தான் சிறந்த மருந்து.
- வாரம் ஒருமுறை சுண்டைக்காயை நம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- முன்னோர் சொல்லியதெல்லாம் நம் நன்மைக்கே என்றெண்ணி, அதனை பின்பற்றி வந்தால் நோயின்றி நலமுடன் வாழலாம்.

அரியலூர் மாவட்டத்தில் ரூ.347 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவக் கல்லூரி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.07.2020 அன்று, தலைமைச் செயலகத்தில், புதிதாக கட்டப்படவுள்ள அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 07.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், அரியலூர் தெற்கு கிராமத்தில் 347 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 89 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பெட் சி.டி. ஸ்கேன் கருவி, 2 நேரியல் முடிக்கி கருவிகள், 4 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களில் படிப்படியாக அரசு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருகிறது. அந்த வகையில், கடந்த 2017–2018ஆம் கல்வியாண்டில் புதுக்கோட்டையில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், 2019–2020ஆம் கல்வியாண்டில் கரூரில் 150 மாணவர்கள் சேர்க்கையுடன் கரூர் அரசு மருத்துவக் கல்லூரியும் தொடங்கப்பட்டன. ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செயல்பட்டு வந்த ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரியானது 2019–2020ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசின் நிதியுதவியுடன், கடந்த 2019ஆம் ஆண்டில், இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நீலகிரி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்க மாண்புமிகு அம்மாவின் அரசு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று சரித்திர சாதனையை படைத்துள்ளது.

அதன்படி, இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அந்த வகையில், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், அரியலூர் தெற்கு கிராமத்தில் 27 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்படவுள்ள புதிய அரசு மருத்துவக் கல்லூரிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இப்புதிய அரசு மருத்துவக் கல்லூரி நிறுவிட, 347 கோடி ரூபாய் அனுமதித்து நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதில் மத்திய அரசின் பங்களிப்பாக 195 கோடி ரூபாய் நிதியும், தமிழ்நாடு அரசின் பங்களிப்பாக 130 கோடி ரூபாய் நிதியுடன், கட்டடம் கட்டுவதற்காக கூடுதலாக 22 கோடி ரூபாய் நிதியும் வழங்கும். முதற்கட்டமாக தமிழ்நாடு அரசால் 100 கோடி ரூபாய் நிதியும், மத்திய அரசால் 50 கோடி ரூபாய் நிதியும் விடுவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் 102 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், மருத்துவமனைக் கட்டடங்கள் 125 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், குடியிருப்பு மற்றும் விடுதிக் கட்டடங்கள் போன்றவை 119 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்படும். அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி 150 எம்.பி.பி.எஸ். இடங்களுடன் நிறுவப்படும்.

மேலும், சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள பெட் சி.டி. ஸ்கேன் கருவி மற்றும் நேரியல் முடுக்கி கருவி (Linear Accelerator);

கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அமைந்துள்ள மண்டல புற்றுநோய் மையத்தில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நேரியல் முடுக்கி கருவி (Linear Accelerator);

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, ஈரோடு மாவட்டம் – பெருந்துறை, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, பெரம்பலூர் – அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் – அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் 24 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 4 எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகள்:

என மொத்தம் 89 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான மருத்துவக் கருவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார்கள்.

ஜூலை 17: தியாகிகள் தினம்

அதிக நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனார்

தேச சேவையின் காரணமாக 1944 ஆம் ஆண்டு மாதம் ரூ.150/– ஊதியத்திலிருந்த வேலையை விட்டு விட்டு திருச்செங்கோட்டிலிருந்த காந்தி ஆசிரமத்தில் ரூ.30/– சம்பளத்தில் வேலைக்கு சேர்ந்தார்.

1951ஆம் ஆண்டு விருதுநகரில் உள்ள சூலக்கரையில் ஓர் ஆசிரமம் அமைத்து செயல்பட்டுள்ளார்.

இன்றைய தமிழகத்தின் பெயர் சென்னை மாகாணம் என இருந்த போது அப்பெயரை மாற்றித் தமிழ்நாடு என பெயரிட வேண்டும் எனக் கோரி 27.07.1956 நாள் முதல் 13.10.1956 முடிய 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்துள்ளார். 10.10.1956 அன்று மதுரையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்திய வரலாற்றிலேயே தாம் மேற்கொண்ட கொள்கைக்காக காந்திய வழியில் அதிக நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்டவர் இவர் ஒருவரே ஆவார்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ரூ.2.99 கோடி மதிப்பீட்டில் 5 மணிமண்டபங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.06.2020 அன்று
தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 16.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், கோ.அபிஷேகபுரத்தில் 1 கோடியே 85 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் ஆகியோரது முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபங்களுக்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், 1 கோடியே 14 இலட்சத்து 7 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் மற்றும் அல்லாள இளைய நாயகர் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட மண்டபத்திற்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

நாட்டிற்காக பெரும் தொண்டாற்றி, பல்வேறு தியாகங்களைச் செய்த தலைவர்கள் மற்றும் சான்றோர்களை சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையிலும் நினைவிடங்கள், நினைவு இல்லங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு உருவாக்கி, பராமரித்து வருகிறது.

**அளவான பேச்சின் மூலம்
எல்லையற்ற சக்தியைப் பெறலாம்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.02.2019 அன்று சட்டப்பேரவை விதி எண்.110இன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில்,

“பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்” என்றும்,

“கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு அன்னாருடைய பிறந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், தேரூரில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்கப்படும்” என்றும்,

“நீதிக்கட்சியின் வைரத் தூண் என்று அழைக்கப்பட்ட சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களுக்கு அப்பகுதி மக்களின் கோரிக்கையினை ஏற்று, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்து, ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படும்” என்றும்,

“திரைப்படத் துறையிலும், பாரம்பரிய இசைத் துறையிலும் திரு.எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களின் பன்முக பங்களிப்பினையும், சாதனையையும் அங்கீகரிக்கும் வகையிலும், அவரது நினைவினை போற்றும் வகையிலும் தமிழ்நாடு அரசால் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திரு.எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்” என்றும்,

“நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் காவேரியின் குறுக்கே தடுப்பணை அமைத்து சுமார் 5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெற, இராஜ வாய்க்கால் ஏற்படுத்திய திரு. அல்லாள இளைய நாயகர் அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், அப்பகுதி விவசாய பெருமக்களின் கோரிக்கையினை ஏற்று, அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ஜேடர்பாளையத்தில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்கப்படும்” என்றும் அறிவித்தார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டம், கோ. அபிஷேகபுரத்தில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு 99 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்; சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கு 43 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் மற்றும் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு 42 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்படவுள்ள முழு திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தோவாளை கிராமத்தில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு 92 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்;

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வடகரையாத்தூர் கிராமம், ஜேடர்பாளையம் காவேரியாற்றின் இடக்கரையில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு 21 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள முழு திருவுருவச் சிலையுடன் கூடிய குவிமாட மண்டபம்;

என மொத்தம் 2 கோடியே 99 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 5 மணிமண்டபங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ●

13.35 இலட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,000 நிவாரணம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஊரடங்கு காலத்தில், மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை வைத்துள்ள சுமார் 13.35 இலட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 1,000 ரூபாய் ரொக்கம் நிவாரணமாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு NEET 2020 போட்டித் தேர்வுக்கான இணையதள கட்டணமில்லா பயிற்சி வகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 16.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 16.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு NEET–2020 போட்டித் தேர்வுக்கான இணையதள (online) பயிற்சி வகுப்பினை துவங்கி வைத்தார்கள்.

NEET போன்ற போட்டித் தேர்வுகளை மாணவ, மாணவியர் எவ்வித தயக்கமும், தளர்வும் இல்லாமல், உறுதியான எண்ணத்தோடு எதிர்கொள்ளும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு தனித்துவம் மிக்க பயிற்சி அளிக்கும் திட்டத்தினை 13.11.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். ஒன்றியத்திற்கு ஒரு மையம் வீதம் 412 மையங்களில் இப்பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக பள்ளிகள் திறக்கப்படாத நிலையில், பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு நீட் போட்டித் தேர்விற்கான பயிற்சியை அளித்திடும் வகையில், NEET–2020 போட்டித் தேர்வுக்கான இணையதள (online) கட்டணமில்லா பயிற்சியினை வழங்கிட Amphisoft Technologies (E-box) நிறுவனத்துடன் பள்ளிக்கல்வித் துறை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சியினை பெற இதுவரை 7,420 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர்.

Amphisoft Technologies நிறுவனத்தால் இணையதளம் மூலமாக, ஒவ்வொரு நாளும் இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் விலங்கியல் பாடங்களுக்கு தலா 1 மணி நேரம் வீதம், 4 மணி நேர பயிற்சியும், பயிற்சி முடித்தவுடன் அன்றைய தினமே ஒவ்வொரு பாடத்திற்கும் 1 மணி நேரம் வீதம், 4 மணி நேரம் பயிற்சித் தேர்வுகளும் நடத்தப்படவுள்ளன. மேலும், 80 பயிற்சி தேர்வுகள், 80 வளரரித் தேர்வுகள், 5 அலகுத் தேர்வுகள், 12 திருப்புதல் தேர்வுகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க...

ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளி, கருப்பு திராட்சை, ஸ்ட்ராபெர்ரி போன்ற பழங்களும், வைட்டமின் சி அதிகம் உள்ள நெல்லிக்காய், கொய்யா, எலுமிச்சை, உலர் திராட்சை போன்றவையும் நல்லது.

நல்லெண்ணெய் மகத்துவம்!

உலகின் வெப்ப மண்டல நாடுகளில் அதிகம் விளை விக்கப்படும் ஒரு தானிய வகைகளில் ஒன்று எள். இது பல ஊட்டச்சத்துக்கள் கொண்ட எள் தானியங்களை பயன்படுத்தி பல உணவு வகைகள் தயார் செய்து உண்ணப்படுகின்றன. அந்த எள்ளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய் தான் நல்ல எண்ணெய் எனப்படுகிறது.

உலகெங்கிலும் இருக்கின்ற மக்கள் தங்கள் அன்றாட உணவு தயாரிப்பில் நல்லெண்ணெய் பயன்படுத்துகின்றனர். இந்த நல்லெண்ணெய் பயன்படுத்தி செய்யப்படும் உணவுகளை சாப்பிடுவதாலும் அந்த நல்லெண்ணெய்யை மூலம் மனிதர்களுக்கு கிடைக்கும் வேறு பல மருத்துவரீதியான நன்மைகள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

நல்லெண்ணெய் பயன்கள் :

தோல்களுக்கு கவசமாக விளங்குகிறது

தோல் நோய்கள் குணமாக நமது உடலை காக்கும் கவசமாக வெளிப்புறத் தோல் இருக்கிறது. வெளிப்புறத் தோலுக்கு மிகுந்த நன்மை பயக்கும் ஒரு எண்ணெய் வகையாக நல்லெண்ணெய் இருக்கிறது. நல்லெண்ணெயில் ஜிங்க் சத்து அதிகம் உள்ளது. இந்த ஜிங்க் சத்து நமது தோலில் ஜவ்வு தன்மையை நீடிக்கச்செய்து, மிருதுவான தோல் ஏற்பட செய்கிறது.

முதுமை காரணமாக தோலில் ஏற்படும் சுருக்கங்கள், தழும்புகள் போன்றவற்றை நீக்குகிறது. கோடை காலங்களில் நல்லெண்ணெயை சிறிது எடுத்து கைகளில் மேற்புறமாக சிறிது தடவிக் கொள்வதால் கடுமையான சூரிய வெப்பத்தால் தோலுக்கு பாதிப்புகள் ஏற்படாமல் காக்கிறது.

வியர்வை மற்றும் இன்னபிற தொற்றுக் கிருமிகளால் தோல் வியாதிகள் ஏற்படாமல் தடுக்கிறது. இதயம் நலம் பெற இதயம் ஆரோக்கியமாக இருக்கவும், இதய பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கவும் ஒரு சிறந்த உணவுப் பொருளாக நல்லெண்ணெய் இருக்கிறது.

இதயத்திற்கு வலு சேர்க்கிறது

நல்லெண்ணெயில் தயாரிக்கப்பட்ட உணவுகளை அடிக்கடி சாப்பிடுவதால் இதயம் மற்றும் இதயம் தொடர்பான தசைகள், நரம்புகள் போன்றவற்றில் அதிகளவில் கெட்ட கொழுப்புகள் படிவதைத் தடுத்து இதய பாதிப்பு உண்டாகாமல் காக்கிறது. உடல், மனம் உற்சாகமாக இருக்க உடலில் இருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் இரத்த ஓட்டம் சீராகவும், சரியான விகிதத்திலும் சென்றால் மட்டுமே நமது உடலும், மனமும் சுறுசுறுப்பாக இயங்கும்.

ஊட்டச்சத்துகள் நிறைந்தது

நல்லெண்ணெயில் அதீத செம்புச் சத்து மற்றும் ஜிங்க் சத்துக்கள் இருக்கின்றன. இதில் செம்புச் சத்து நமது உடலில் இரத்த அணுக்களின் உற்பத்திக்கு மிகவும் உதவிகரமாக இருக்கிறது. செம்புச் சத்தினால் இரத்த ஓட்டம் சீராக்கப்பட்டு, உடலின் அனைத்துப் பகுதிகளுக்கும் இரத்தத்தின் மூலம் பிராண வாயு முழுமையாக கொண்டு செல்லப்படுகிறது. இதன் காரணமாக உடல் மற்றும் மனம் சுறுசுறுப்பாக, உற்சாகமாக செயல்படச் செய்கிறது.

புற்றுநோய் வராமல் காக்க எந்த வகையான புற்றுநோய் ஏற்படுவதையும் தடுப்பதில் நல்லெண்ணெய் சிறப்பாக செயல்படுகிறது. நல்லெண்ணெயில் போலேட் எனப்படும் கூட்டு வேதிப்பொருள் அதிகம் உள்ளது. மேலும், மக்னீசிய சத்தும் நல்லெண்ணெயில் தேவைக்கு அதிகமான அளவில் இருக்கின்றன. இந்த இரண்டு சத்துக்களும் குடல் மற்றும் ஈரல் பகுதிகளில் உண்டாகக்கூடிய புற்றுநோய்களை தடுப்பதில் பேருதவி புரிகிறது.

கால்சியம் சத்தும் நல்லெண்ணையில் அதிகமுள்ளது. இது வயிறு மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உறுப்புகளில் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கிறது. ஆர்த்ரைடிஸ் நோய் குணமாக உடலில் சில அத்தியாவசிய

சத்துக்கள் குறையும் போது எலும்புகளின் மூட்டுக்களில் வலி மற்றும் வீக்கம் அதிகம் ஏற்படுகின்றன. இத்தகைய பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்க நமது உணவில் செம்புச்சத்து அதிகம் இருப்பது அவசியம். நல்லெண்ணெயில் இந்த செம்புச்சத்து நிறைந்து உள்ளன.

எலும்புகளுக்கும், தசைகளுக்கும் வலு சேர்க்கிறது

நல்லெண்ணெய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிடுபவர்களின் இரத்தத்தில் அந்த சத்துகள் கலந்து எலும்புகள் மற்றும் எலும்பை சார்ந்து இருக்கும் தசைகளுக்கு வலிமையை தருகின்றன. குறிப்பாக ஆர்தரைட்டிஸ் எனப்படும் மூட்டுவலி நோய்களால் அவதிப்படுபவர்கள்,

அடிக்கடி நல்லெண்ணெய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை சாப்பிடுவதால் மூட்டு வலி மற்றும் வீக்கங்கள் குறைவதை அனுபவ பூர்வமாக உணர முடியும்.

பற்கள் வலுப்பெறும்

பற்கள் வலுப்பெற ஆயில் புல்லிங் எனும் மருத்துவ செயல்முறையை பலரும் கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆனால், இந்த மருத்துவ செயல்பாடு பல நூற்றாண்டுகளாக நமது நாட்டில் பின்பற்ற பட்டு வருகிறது. இந்த ஆயில் புல்லிங் செய்வதற்கு சிறந்த எண்ணெயாக நல்லெண்ணெய் இருக்கிறது.

தினமும் காலையில் எழுந்ததும் பல் துலக்குவதற்கு முன்பாக ஒரு மேசைக்கரண்டி அளவு நல்லெண்ணெய் வாயில் ஊற்றிக்கொண்டு, 20 நிமிடங்கள் வரை வாயை நன்கு கொப்பளித்து துப்பி, பிறகு பல் துலக்க வேண்டும். இந்த ஆயில் புல்லிங்கை தினமும் செய்து வருபவர்களுக்கு பற்சொத்தை ஏற்படாது. ஈறுகளில் வீக்கம் மற்றும் இரத்தம் வடிதல் போன்ற குறைபாடுகள் நீங்கும். பற்களும் வலிமை அடையும். மேலும் பற்களில் மஞ்சள் கரை ஏற்படுவதை குறைத்து பளபளப்பு தன்மையை அதிகரிக்கும்.

மன அழுத்தத்தை குறைக்கும்

படபடப்பு தன்மை, மன அழுத்தம் நீங்க மனிதர்களின் மனம் ஆரோக்கியமாக இருந்தாலே உடல் நலம் சிறப்பாக இருக்கும். ஒரு சில மனிதர்களுக்கு காரணமற்ற அதிக படபடப்பு தன்மை மற்றும் அதீத மன அழுத்தம் உண்டாகிறது.

நல்லெண்ணெயில் இருக்கும் டிரோசின் எனப்படும் அமினோ அமிலங்கள் வேதிப் பொருள் நிறைந்துள்ளது. இந்த டிரோசின் எனப்படும் வேதிப்பொருள் செரட்டோனின் எனப்படும் ஒரு வேதிப்பொருளை நமது மூளையில் சுரக்கச் செய்து, உடலில் நன்மை செய்யும் என்சைம்கள் மற்றும் ஹார்மோன்களின் சுரப்பை அதிகரித்து, மனஅழுத்தம் மற்றும் பதட்டத்தை போக்கி மன அமைதி மற்றும் மகிழ்ச்சியான மனநிலை ஏற்படுத்துவதாக மருத்துவ ஆய்வுகளில் கண்டறியப் பட்டுள்ளன. எலும்புகளின் வளர்ச்சி மற்றும் வலிமை மனிதர்களின் எலும்பு வளர்ச்சி மற்றும் உறுதித் தன்மைக்கு கால்சியம் சத்து அவசியமாக இருந்தாலும், செம்புச் சத்து மற்றும் ஜின்க் சத்தும் எலும்பு களுக்கு தேவையான சத்துக்களாக இருக்கிறது.

நல்லெண்ணெயில் கால்சியம், செம்பு மற்றும் ஜிங்க் சத்து ஆகிய மூன்றும் சரியான அளவில் இருக்கின்றன. எலும்புகள் வலிமை பெறவும், வளர்ச்சி பெறவும் நல்லெண்ணெய் கொண்டு செய்யப்பட்ட உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். குறிப்பாக

வளரும் பருவத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு நல்லெண்ணெய் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை கொடுப்பதால் அவர்களின் எலும்புகளின் வளர்ச்சி அதிகரிப்பதோடு வலிமையும் அதிகரிக்கிறது.

எண்ணெய் தேய்த்து குளித்தலால் ஏற்படும் நன்மை

குழந்தைகள் நலம் பெற குழந்தைகளுக்கு மிகவும் நன்மை தரும் ஒரு இயற்கை உணவு மற்றும் எண்ணெயாக நல்லெண்ணெய் இருக்கிறது. குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு நல்லெண்ணெயை உடல் முழுவதும் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்வதால் அக்குழந்தைகளுக்கு ஆழ்ந்த உறக்கம் மற்றும் சிறந்த உடல் வளர்ச்சியும் கொடுக்கிறது. மேலும், குழந்தைகளுக்கு அணிவிக்கும் ஆடைகளில் ஏற்படும் ஈரத்தன்மையால் அக்குழந்தைகளின் தோலில் சிறு அளவிலான புண்கள், கீறல்கள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட இடங்களில் நல்லெண்ணெய் துளிகளை விட்டு தடவுவதால் அக்குழந்தைகளின் தோல் அரிப்பு மற்றும் தழும்புகள் நீங்குகின்றன.

நல்லெண்ணெயை பயன்படுத்தி ஆரோக்கியம் பெறுவோம்!

❖ ❖ ❖

மாவட்டத்தில் மட்டும் பயணம் செய்ய இ-பாஸ் தேவையில்லை, மாவட்டம் விட்டு மாவட்டம் செல்ல இ-பாஸ் பெறவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 24.06.2020

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 24.06.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், நிவாரணப் பணிகளை தீவிரமாக மேற்கொள்வது குறித்தும், பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது குறித்தும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு செய்தார்கள். அவ்வாய்வுக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த மாவட்ட ஆட்சியர்கள், தற்போது வாகனப் போக்குவரத்துக்கு மண்டல (Zonal) முறை அமலில் உள்ளதால், மண்டலங்களின் பிற மாவட்டங்களிலிருந்து இ–பாஸ் இல்லாமல் வருபவர்களுக்கு, நோய்த் தொற்று கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களை கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளதாகவும், மக்களின் பயணங்களை இதனால் தடுக்க இயலவில்லை என்றும், எனவே, வாகனப் போக்குவரத்தில் மண்டல முறைக்கு பதில், இ–பாஸ் இல்லாமல், மாவட்டத்திற்குள் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்றும், வேறு மாவட்டங்களுக்கு செல்லவோ, பிற மாவட்டங்களிலிருந்து வரவோ இ–பாஸ் பெற்றே பயணம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். இந்தக் கருத்து ஏற்கப்பட்டு, வரும் 25.06.2020 முதல் 30.06.2020 வரை வாகனப் போக்குவரத்தில் மண்டல முறை தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டு, அதற்கு பதில் மாவட்டத்தில் மட்டும் பயணம் செய்ய இ–பாஸ் தேவையில்லை என்றும், மாவட்டம் விட்டு மாவட்டம் செல்ல இ–பாஸ் பெறவேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட காலத்தில், பொதுப் பேருந்து போக்குவரத்து மாவட்டங்களுக்குள் மட்டும் செயல்படும்.

கொரோனா நோய் பரவலைத் தடுக்க, பொதுமக்கள் தங்களின் ஒத்துழைப்பினை வழங்கி நோய் பரவலை தடுக்க அரசுடன் இணைந்து செயல்பட அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜூலை மாதத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் நியாய விலைக் கடைகள் மூலம் விலையில்லாமல் வழங்க உத்தரவு!

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினைத் தடுக்க பல்வேறு தீவிர நோய்த் தடுப்பு பணிகளையும், நிவாரணப் பணிகளையும் போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு அம்மாவின் அரசு மேற்கொண்டு வருகிறது.

தற்போது ஜூலை 31ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு ஜூலை மாதத்திற்கான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும், அதாவது ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வழங்கிய அரிசி அளவின் படி, கூடுதல் அரிசியுடன் நியாய விலைக் கடைகளில், விலையின்றி வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

நோய்த் தொற்று ஏற்படாத வண்ணம் மேற்படி அத்தியாவசியப் பொருட்கள் பாதுகாப்பாக அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், 06.07.2020 முதல் 09.07.2020 வரை, குடும்ப அட்டைதாரர்களுக்கு அவரவர் வீடுகளிலேயே டோக்கன் (Token) வழங்கப்படும். அந்த டோக்கன்களில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் நாள் மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள், டோக்கனில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்தில் தத்தமது நியாய விலை கடைகளுக்குச் 10.07.2020 முதல் சென்று அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். தடைசெய்யபட்ட பகுதிகளில் (Containment Zones) உள்ள மக்களுக்கு அவரவர் வீடுகளுக்கே சென்று அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும்.

இஞ்சி

- தோலில் உண்டாகும் உலர்சருமம், காயங்கள், சிரங்குகள் போன்றவற்றுக்கு இது நல்ல மருந்தாகும்.
- மலச்சிக்கல் ஏற்படுவதை தடுக்கிறது. செரித்தலைச் சீராக்கி வயிற்றுவலி ஏற்படுவதை தடுக்கிறது.
- ஜலதோஷ நோய்க்காரணியான வைரஸைத் தாக்கி அழிக்கிறது. தலைவலியை போக்குகிறது இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது.
- கொழுப்புச்சத்தைக் குறைக்கிறது. மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இருதய சுவாசத் தசைகள் சீராக இயங்க உதவுகிறது.
- மகளிரின் கருப்பை பிரச்சினைகளுக்கும், மாதவிலக்கு நேரங்களில் அடிவயிற்றில் உண்டாகும் வலிகளுக்கும் நன்மருந்தாக உள்ளது.
- இஞ்சியானது பசியைத் தூண்டுவதுடன் தேவையற்ற கழிவுகளை வெளிக்கொணர பேருதவி புரிகிறது.
- இஞ்சி சாறை பாலில் கலந்து சாப்பிட வயிறு நோய்கள் தீரும், உடம்பு இளைக்கும். இஞ்சியை நன்றாக சுட்டு அதை நசுக்கி உடம்பில் தேய்க்க பித்த நோய்கள் தீரும்.
- இஞ்சியானது இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதை தடுக்கிறது. மேலும், அடைப்பு இருந்தாலும் கரைக்கவும் உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.
- தினமும் ஒரு துண்டு இஞ்சியை அரைத்து ஒரு டம்பளர் மோரில் கரைத்துக் குடித்தால் இடுப்பு பகுதியில் கொழுப்பு சேராமல் பார்த்துக் கொள்ளும், சேர்ந்த கொழுப்பையும் கரைக்கும்.
- உடலின் ஜீரண உறுப்புகள், சிறுகுடல், பெருங்குடல், உள்ளிட்டவை இஞ்சி சாறு மூலம் சுத்தப்படுத்தப்படுகிறது.
- பெரும்பாலான நோய்களுக்கு காரணமாக இருக்கும் மலச்சிக்கலை அறவே அகற்றி உடலுக்கு புத்துணர்ச்சியை தருகிறது.
- இஞ்சி சாறில் வெல்லம் கலந்து சாப்பிட, வாதக் கோளாறு தீரும்.

ஈரானில் சிக்கித் தவிக்கும் 40 மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் மாண்புமிகு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **ஜெய்சங்கர்** அவர்களுக்கு, 10.07.2020 அன்று எழுதிய கடிதத்தின் தமிழாக்கம்.

ஈரானில் தவித்து வரும் தமிழக மீனவர்களை மீட்கக் கோரி கடந்த மே 19ஆம் தேதியன்று எழுதிய கடிதத்தை தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதன்படி, ஐ.என்.எஸ்.ஜலஷ்வா கப்பல் மூலம் தமிழக மீனவர்கள் 681 பேர் கடந்த ஜூலை 1ஆம் தேதி பாதுகாப்பாக தமிழகம் திரும்பினர். அதற்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், கப்பலில் இடம் இல்லாத காரணத்தால் இன்னும் தமிழக மீனவர்கள் 40 பேர், ஈரானிலேயே தவித்து வருகின்றனர். எனவே, அந்த மீனவர்களை சிறப்பு விமானம் மூலம் தமிழகம் அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தங்களை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதம்தோறும் உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஆண்டுதோறும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 2020–2021ஆம் ஆண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 01.01.2020ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். ஆண்டு வருவாய் ரூ.72,000/–க்குள் இருக்க வேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் வலைத்தளம் வாயிலாக (ஆன்லைன்) பெறப்பட்ட வருமானச் சான்று, தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான ஆதாரங்கள் மற்றும் தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான தகுதிநிலைச் சான்று தமிழறிஞர்கள் இரண்டு பேரிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவம் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.com) இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுபவருக்கு திங்கள்தோறும் உதவித் தொகையாக ரூ.2,500/–, மருத்துவப்படி ரூ.500/– மற்றும் கட்டணமில்லா பேருந்துச் சலுகையும் அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும். விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டங்களில் மாவட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும் மண்டலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாக அனுப்பப்பட வேண்டும். சென்னை மாவட்டத்திலுள்ளவர்கள் சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்ககத்திற்கு இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை–8 என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்பப்பெறலாம். **விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசி நாள்: 30.09.2020.**

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும் 31.07.2020 வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பு!

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பொது மக்களை பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான நிவாரணங்களை உடனுக்குடன் வழங்கி, முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால் தான் தமிழ்நாட்டில் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவீதம் நாட்டிலேயே அதிகமாகவும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்பு மிகக் குறைவாகவும் இருந்து வருகிறது. அதே நேரத்தில், மாண்புமிகு அம்மாவின் அரசு மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்த அவ்வப்போது பல்வேறு தளர்வுகளை வழங்கி வருவதுடன், சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு புதிய முதலீடுகளை ஈர்த்தும், ஊரகத் தொழில்களை மீட்டெடுத்தும் தொழில் வளத்தைப் பெருக்க புதிய திட்டங்களை செயல்படுத்தியும் வருகின்றது.

இந்தியா முழுவதும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக மத்திய அரசு தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தியதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு முழுவதும் ஊரடங்கை அமல்படுத்தியது. இதைத் தொடர்ந்து, கொரோனா தொற்றின் நிலைமையை கருத்தில் கொண்டும், மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், சில தளர்வுகளுடன் 30.06.2020 வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டது. அதே சமயம், ஏழை மக்கள் ஊரடங்கால் எதிர்கொண்டுள்ள சிரமங்களைக் களைய, ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கான ரேசன் பொருட்கள் அனைத்தும், 2.01 கோடி குடும்பங்களுக்கும் விலையில்லாமல் வழங்க உத்தரவிட்டுள்ளதுடன், கட்டடத் தொழிலாளர்கள், அமைப்புசாரா ஓட்டுநர்கள் ஆகியோருக்கு அரிசி போன்ற பொருட்களை கூடுதலாக வழங்கியும், அனைத்து 17 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மற்றும் பல்வேறு துறையில் உள்ள பிற நல வாரிய தொழிலாளர்களை சேர்த்து 35.65 இலட்சம் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே தலா 1,000 ரூபாய் வழங்கியதைப் போல், மீண்டும் தலா 1,000 ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

29.06.2020 அன்று மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் மாண்புமிகு முதலமைச்சர் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில், தற்போது எடுக்கப்பட்டு வரும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் சிறப்பாக இருப்பதால் தான், கொரோனா நோய்த்தொற்று ஓரளவு கட்டுக்குள் கொண்டுவர முடிந்தது எனவும், நோய்த் தடுப்பு கட்டுப்பாட்டு பகுதிகளில் நோய்த் தடுப்பு பணிகளும் கட்டுப்பாடுகளும் தீவிரப்படுத்த வேண்டும் என கருத்துகளை தெரிவித்தார்கள். பல்வேறு தினங்களில் மாண்புமிகு முதலமைச்சர் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக 22.06.2020 அன்று நடத்தப்பட்ட காணொலிக் காட்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், ஊரடங்கை தளர்த்துவதற்காக நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், 29.06.2020 அன்று பொது சுகாதார வல்லுநர்களுடன் நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து, கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும் தற்போது 30.06.2020 முடிவடைய உள்ள ஊரடங்கு உத்தரவு, 31.07.2020 நள்ளிரவு 12 மணி வரை தமிழ்நாடு முழுவதும் மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது.

எனினும் முழு ஊரடங்கு உத்தரவு தற்போது அமலில் உள்ள பகுதிகளான பெருநகர சென்னை காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளிலும்,

திருவள்ளூர் மாவட்டத்தில், பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகள், திருவள்ளூர் நகராட்சி, கும்மிடிப்பூண்டி, பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளிலும் மற்றும் பூவிருந்தவல்லி, ஈக்காடு மற்றும் சோழவரம் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில், பெருநகர சென்னை காவல் எல்லைக்குட்பட்ட பகுதிகள், செங்கல்பட்டு மற்றும் மறைமலைநகர் நகராட்சிகளிலும், நந்திவரம்– கூடுவாஞ்சேரி பேரூராட்சியிலும் மற்றும் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பெருநகர சென்னை காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நோய்த்தொற்று அதிகம் உள்ளதை கருத்தில் கொண்டு, நோய்ப்பரவலை தடுக்க நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ள நிலையில் பேரிடர் மேலாண்மை சட்டம், 2005ன் கீழ் 19.06.2020 அதிகாலை 00 மணி முதல் 30.06.2020 இரவு 12 மணி வரை 12 நாட்களுக்கு அமல்படுத்திய முழு ஊரடங்கு உத்தரவு மற்றும் மதுரை மாவட்டத்தில் மதுரை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகள், பரவை பேரூராட்சி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு மற்றும் திருப்பரங்குன்றம் வட்டாரங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 24.06.2020 அதிகாலை 00 மணி முதல் 30.06.2020 இரவு 12 மணி வரை 7 நாட்களுக்கு அமல் படுத்திய முழு ஊரடங்கு, கொரோனா நோய்த்தொற்றை ஒரு கட்டுக்குள் கொண்டு வருவதற்கு உதவியதால், **இந்த முழு ஊரடங்கு மேற்கண்ட பகுதிகளில் மட்டும் 05.07.2020 வரை தொடரும். 19.06.2020க்கு முன்னர் சென்னை மற்றும் அதை ஒட்டியுள்ள மாவட்டங்களில் உள்ள பகுதிகளில் இருந்த ஊரடங்கின் நிலையே 06.07.2020 அதிகாலை 00 மணி முதல் 31.07.2020 நள்ளிரவு 12.00 மணி வரை தொடரும். அதேபோல் மதுரை மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளில் 24.06.2020க்கு முன்னர் இப்பகுதிகளில் இருந்த ஊரடங்கின் நிலையே 06.07.2020 அதிகாலை 00 மணி முதல் 31.07.2020 நள்ளிரவு 12.00 மணிவரை தொடரும்.**

ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட காய்கறி/பழக்கடைகளைப் போன்று, பெருநகர சென்னை மாநகராட்சி, மாநகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகளிடம் இருந்து முறையான வியாபார அனுமதி பெற்ற மீன் கடைகள், கோழி இறைச்சி கடைகள் மற்றும் முட்டை விற்பனை கடைகள் சமூக இடைவெளி நடைமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

- நகர்ப்புர வழிபாட்டுத்தலங்களிலும், பெரிய வழிபாட்டு தலங்களிலும் பொதுமக்கள் வழிபாடு.
- அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள்.
- நீலகிரி மாவட்டத்திற்கும், கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்களுக்கும், வெளியூர் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்படுகிறது.
- தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், பிற விருந்தோம்பல் சேவைகள். எனினும், மருத்துவத் துறை, காவல் துறை, அரசு அலுவலர்கள், உள்ளிட்ட வெளி மாநிலத்தவர் மற்றும் தனிமைப்படுத்தப்படும் பணிகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- வணிக வளாகங்கள் (Shopping Malls).
- பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள். எனினும், இந்நிறுவனங்கள் இணைய வழிக் கல்வி கற்றல் தொடர்வதுடன், அதனை ஊக்கப்படுத்தலாம்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.
- மெட்ரோ இரயில் / மின்சார இரயில்.
- திரையரங்குகள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள், கேளிக்கைக் கூடங்கள், மதுக்கூடங்கள் (Bar), பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள், கடற்கரை, சுற்றுலாத் தலங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள்.
- அனைத்து வகையான சமுதாய, அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், சமய, கல்வி, விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள்.
- மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து போக்குவரத்து.

மேற்கண்ட கட்டுப்பாடுகள் தொற்றின் தன்மைக்கேற்றவாறு, படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்படும்.

முழு ஊரடங்கு:

05.07.2020, 12.07.2020, 19.07.2020 மற்றும் 26.07.2020 ஞாயிற்றுக் கிழமைகளில் எந்தவிதமான தளர்வுகளும் இன்றி தமிழ்நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமல் படுத்தப்படும்.

திருமண நிகழ்ச்சிகள் மற்றும் இறுதி ஊர்வலங்களுக்கான கட்டுப்பாடுகள்:

- திருமண நிகழ்ச்சிகளில் 50 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.
- இறுதி ஊர்வலங்கள் மற்றும் அதைச் சார்ந்த சடங்குகளில் 50 நபர்களுக்கு மேல் பங்கேற்கக் கூடாது.

பொது பேருந்து போக்குவரத்து :

மாநிலத்தில் மாவட்டங்களுக்குள் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் மற்றும் அரசு பொது பேருந்து போக்குவரத்து 01.07.2020 முதல் 15.07.2020 வரை தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

இ–பாஸ் முறை :

- அந்தந்த மாவட்டத்திற்குள் இ–பாஸ் இல்லாமல் செல்ல அனுமதி அளிக்கப்படும்.
- வெளி மாநிலங்களுக்கு சென்று வரவும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்குள் வரவும், மாவட்டங்களுக்கிடையே சென்று வரவும், இ–பாஸ் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.
- முழு ஊரடங்கு நீட்டிக்கப்படும் இடங்களில் 30.06.2020 வரை வழங்கப்பட்ட இ–பாஸ் 05.07.2020 வரை செல்லும். இதற்கு மீண்டும் புதிய இ–பாஸ் பெறத் தேவை இல்லை.
- ஒரு மாவட்டத்திலிருந்து வேறொரு மாவட்டத்திற்கு அரசுப் பணிகளுக்கான ஒப்பந்தங்களில் பங்கேற்க விரும்பும் ஒப்பந்ததாரர்களுக்கும், அப்பணியை மேற்பார்வை செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் இப்பணிகள் சம்பந்தமாக அரசு அதிகாரிகளை சந்திக்க விரும்பும் ஒப்பந்ததாரர்களுக்கும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்களால் இ–பாஸ் வழங்கப்படும்.

1) பெருநகர சென்னை காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் மற்றும் முழு ஊரடங்கு அமலில் உள்ள காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள பகுதிகளிலும், நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர (Except Containment Zones) மற்ற பகுதிகளில் கீழ்கண்ட பணிகளுக்கு மட்டும் 06.07.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

1. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களில், அந்நிருவாகமே ஏற்பாடு செய்யும் வாகனங்களில் 50 சதவீத பணியாளர்கள் அதிகபட்சம் 80 நபர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.
2. அனைத்து தனியார் நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களும் 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. எனினும், இயன்ற வரை பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும்.
3. வணிக வளாகங்கள் (malls) தவிர்த்து, அனைத்து ஷோரூம்கள் மற்றும் பெரிய கடைகள் (நகை, ஜவுளி போன்றவை) 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்படலாம். மேலும், ஒரே நேரத்தில் அதிகபட்சம் 5 வாடிக்கையாளர்கள் மட்டும் கடைக்குள் வருவதை உறுதி செய்து, தகுந்த சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில், அனுமதிக்கப்பட வேண்டும். கடைகளில், குளிர் சாதன வசதி இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.
4. உணவகங்களில் அமர்ந்து உணவு அருந்த அனுமதி அளிக்கப்படுவதோடு, உணவகங்களில், சமூக இடைவெளியை கடைபிடிக்கும் நோக்கத்துடன், உணவகங்களில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுகிறது. எனினும், உணவகங்களில் குளிர்சாதனவசதி இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.
5. தேநீர் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் காய்கறி கடைகள், மளிகைக் கடைகள் ஆகியவை காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படுகிறது.
6. தேநீர் கடைகளில் உள்ள மொத்த இருக்கையில் 50 விழுக்காடு அளவு மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உண்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

7. வாடகை மற்றும் டாக்ஸி வாகனங்களை, ஓட்டுநர் தவிர்த்து, மூன்று பயணிகளை மட்டுமே கொண்டு, பயன்படுத்தலாம்.

8. ஆட்டோக்களில், ஓட்டுநர் தவிர்த்து, இரண்டு பயணிகள் மட்டுமே பயணிக்கலாம். சைக்கிள் ரிக்ஷா அனுமதிக்கப்படுகிறது.

9. முடிதிருத்தும் மற்றும் அழகு நிலையங்கள் குளிர் சாதன வசதியைப் பயன்படுத்தாமல், அரசு தனியாக வழங்கிய நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளை பின்பற்றி இயங்க அனுமதிக்கப்படுகிறது.

10. மீன் கடைகள், கோழி இறைச்சி கடைகள், மற்ற இறைச்சி கடைகள் மற்றும் முட்டை விற்பனை கடைகள், சமூக இடைவெளி நடைமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

2) பெருநகர சென்னை காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதி தவிர, தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் (நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர மற்ற பகுதிகளில் – (Except Containment Zones), 01.07.2020 முதலும், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் முழு ஊரடங்கு அமலில் உள்ள பகுதிகள் மற்றும் மதுரை மாவட்டத்தில் மதுரை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகள், பரவை பேரூராட்சி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு மற்றும் திருப்பரங்குன்றம் வட்டாரங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 06.07.2020 முதலும் கீழ்கண்ட பணிகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்படுகிறது:

   1. கிராமப்புரங்களில் உள்ள சிறிய திருக்கோயில்கள், அதாவது 10,000 ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள திருக்கோயில்களிலும், சிறிய மசூதிகளிலும், தர்காக்களிலும், தேவாலயங்களிலும் மட்டும் பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்படும். இத்தகு வழிபாட்டுத்தலங்களில் சமூக இடைவெளி மற்றும் பிற நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களுக்கும், கிராமப்பகுதிகளில் உள்ள பெரிய வழிபாட்டுத் தலங்களுக்கும் தற்போதுள்ள நடைமுறைப்படி பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்பட மாட்டாது.

   2. தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

   3. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் 100 விழுக்காடு பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. எனினும், 20 விழுக்காடு பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை ஊக்குவிக்க வேண்டும்.

   4. அனைத்து தனியார் நிறுவனங்களும் 100 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படுகிறது. எனினும், இயன்ற வரை பணியாளர்கள் வீட்டிலிருந்து பணிபுரிவதை தனியார் நிறுவனங்கள் ஊக்குவிக்க வேண்டும்.

   5. வணிக வளாகங்கள் (malls) தவிர்த்து, அனைத்து ஷோரூம்கள் மற்றும் பெரிய கடைகள் (நகை, ஜவுளி போன்றவை) 50 விழுக்காடு பணியாளர்களுடன் செயல்படலாம். மேலும், ஒரே நேரத்தில் அதிகபட்சம் 5 வாடிக்கையாளர்கள் மட்டும் கடைக்குள் இருக்கும் பொருட்டு தகுந்த சமூக இடைவெளியை கடைபிடிக்கும் வகையில் அனுமதிக்கப்பட வேண்டும். இதுவன்றி, கடைகளில், குளிர் சாதன வசதி இருப்பினும் அவை இயக்கப்படக் கூடாது.

   6. தேநீர் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் காய்கறி கடைகள், மளிகைக் கடைகள் ஆகியவை காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை அனுமதிக்கப்படுகிறது. டாஸ்மாக் உள்ளிட்ட இதர கடைகள் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்கலாம்.

   7. உணவகங்களில் அமர்ந்து உணவு அருந்த அனுமதி அளிக்கப்படுவதோடு, உணவகங்களில், சமூக இடைவெளியை கடைபிடிக்கும் நோக்கத்துடன், உணவகங்களில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுகிறது. எனினும், உணவகங்களில் குளிர்சாதனவசதி இருப்பினும், அவை இயக்கப்படக் கூடாது.

   8. தேநீர் கடைகளில் உள்ள மொத்த இருக்கையில் 50 விழுக்காடு அளவு

மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உண்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

9. அத்தியாவசியமற்ற பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களையும், மின் வணிக நிறுவனங்கள் (E-Commerce) வழங்க அனுமதிக்கப்படுகிறது.

10. வாடகை மற்றும் டாக்ஸி வாகனங்கள் ஒட்டுநர் தவிர்த்து மூன்று பயணிகளுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது.

11. ஆட்டோக்கள் இரண்டு பயணிகளுடன் இயங்க அனுமதிக்கப்படுகிறது. சைக்கிள் ரிக்ஷாவும் அனுமதிக்கப்படுகிறது.

12. மீன் கடைகள், கோழி இறைச்சி கடைகள், மற்ற இறைச்சி கடைகள் மற்றும் முட்டை விற்பனை கடைகள் சமூக இடைவெளி நடைமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

4) **பொது**

- குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144ன் கீழ் பொது இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடக் கூடாது என்ற நடைமுறை தொடர்ந்து அமலில் இருக்கும்.
- தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போதுள்ள நடைமுறைகளின் படி, எந்தவிதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.
- அனைத்து, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது ஊழியர்கள் / பணியாளர்களை வீட்டிலிருந்தபடி பணிபுரிய ஊக்குவிப்பதோடு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.
- முழு ஊரடங்கு 05.07.2020 வரை அமலில் இருக்கும் பெருநகர சென்னை மாநகர காவல் எல்லைக்கு உட்பட்ட பகுதிகள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும், மதுரை மாவட்டத்தில் மதுரை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகள், பரவை பேரூராட்சி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு மற்றும் திருப்பரங்குன்றம் வட்டாரங்களுக்கு உட்பட்ட அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள தொழிற்சாலைகளைப் பொருத்தவரை தற்போதுள்ள நடைமுறை அதாவது, தொழிற்சாலை வளாகத்திலேயோ, அதன் அருகிலேயோ தொழிலாளர்கள் தங்க வைக்கப்பட்டு பணிபுரிய அனுமதிக்கும் நடைமுறை தொடர்வதற்கும் மற்ற பகுதிகளில் தற்போதுள்ள TN E-Pass முறை தொடர்வதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

முழு ஊரடங்கு அமலில் உள்ள சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, மதுரை ஆகிய மாவட்ட பகுதிகளைத் தவிர்த்து மாநிலத்தில் உள்ள பிற மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகள்/ நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள்/ பணியாளர்கள், அருகாமையில், அதாவது, அந்த மாவட்டத்தை ஒட்டியுள்ள மாவட்டத்திலிருந்து வந்து பணிபுரிய, தொழிற்சாலை/நிறுவனம் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து அனுமதி பெற்று, தொழிலாளர்களுக்கு அனுமதி அட்டை வழங்கலாம். இந்த அனுமதி அட்டை, தொழிற்சாலை/ நிறுவனம் அமைந்துள்ள மாவட்டத்தை ஒட்டியுள்ள மாவட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். பிற மாவட்டங்களுக்கு பயன்படுத்தக்கூடாது.

சென்னை பெருநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் சிறப்பு நடவடிக்கைகள்

சென்னை பெருநகரம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் நோய்த் தொற்றைத் தடுக்க நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன. குறிப்பாக, சென்னையில் 15 மண்டலங்களிலும் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் தலைமையில் சிறப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நோய்த் தொற்று உள்ளவர்களுடன் தொடர்புள்ளவர்களைக் (Contact tracing) கண்டறியும் பணி மண்டல அளவில் மேற்கொள்ளப்படுவதுடன், நோய்த் தடுப்பு பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, அப்பகுதியில் உள்ள ஏழைகளுக்கு முகக்கவசம், வைட்டமின் மாத்திரைகள், கபசுர குடிநீர், சத்தான உணவு போன்றவை வழங்கப்படுகிறது. அவர்களின் வாழ்விடம் நெருக்கமாக இருந்தால், அவர்கள் தனிமை முகாம்களில் தங்க வைக்கப்படுகின்றனர். நோய்த் தொற்று ஏற்பட்டவர்கள் விபரம் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டு, தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இது தவிர, சென்னையில் உள்ள 149 நகர ஆரம்ப சுகாதார மையங்களிலும், 19 மருத்துவமனைகளிலும் காய்ச்சல் சோதனை மையம் (Fever clinic) செயல்படுவதுடன்,

4,925 காய்ச்சல் சோதனை மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, நோய் அறிகுறி உள்ளவர்கள் தீவிரமாக கண்டறியப்பட்டு, சோதனை செய்யப்படுகின்றனர். இதனால் 19.06.2020 முதல் 3,36,836 நபர்கள் காய்ச்சல் சோதனையில் பங்குகொண்டு அவர்களில் 15,119 நபர்களுக்கு கொரோனா தொற்று சோதனை செய்யப்பட்டது. இவர்களில் 3,189 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால் நோய்த் தொற்று முன்கூட்டியே கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதால், உயிரிழப்பு தவிர்க்கப்படுகின்றது. இதே போன்ற நடவடிக்கைகள் காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் மதுரை மாவட்டங்களிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில், நோய்த் தொற்று தீவிரமாக உள்ள பகுதிகளில் (Hot spots / Containment Zones) உள்ள ஏழைகள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும், கொரோனா நோய்த் தொற்றுடன் இரத்தக் கொதிப்பு, இதய நோய், சிறுநீரக செயலிழப்பு, புற்று நோய் போன்ற நோய் உள்ளவர்கள் (Co-morbid persons) இந்நோய்த் தொற்றினால் அதிகம் பாதிப்புக்கு உள்ளாக வாய்ப்புள்ளது. இப்பகுதியில் வாழும் ஏழைகளின் வாழ்விடங்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்க முடியாத நிலையில் அமைந்துள்ளன. எனவே, ஒரு முக்கிய நோய் பரவல் தடுப்புப் பணியாக சென்னை மாநகராட்சியில், குறிப்பாக நெரிசலான குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களை முன்னெச்சரிக்கையாக வீடுகள் தோறும் தீவிர ஆய்வு செய்து கண்டறிந்து, பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களை தனிமைப்படுத்தும் முகாம்களில் குறைந்தபட்சம் 7 நாட்களாவது தங்க வைத்து, அவர்களை நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்ற ஒரு முக்கிய நடவடிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது. இவ்வாறு முன்னெச்சரிக்கையாக 8,072 நபர்கள் தனிமை முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதனால், சென்னை மாநகராட்சி பகுதிகளில் அவர்களது வாழ்விடத்தில் நோய்ப் பரவல் தடுக்கப்பட்டுள்ளது.

மதுரை பெருநகர் மற்றும் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளிலும் காய்ச்சல் முகாம்கள் தீவிரப்படுத்தப்பட்டு முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இதுவரை 931 முகாம்கள் நடத்தப்பட்டு 75,252 நபர்கள் காய்ச்சல் சோதனையில் பங்குகொண்டு 8,720 நபர்கள் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 1,389 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அரசு ஊரடங்கை அமல்படுத்தினாலும், பல்வேறு கட்டுப்பாடுகளைவிதித்தாலும்,மக்களின்ஒத்துழைப்பு இல்லையென்றால், இந்த நோய் பரவலை தடுக்க இயலாது. பொது மக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவுவதையும், வெளியிடங்களில் முகக்கவசத்தை அணிந்து செல்வதையும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்து அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்து, அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான், இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியும். மாண்புமிகு அம்மாவின் அரசு அமல் படுத்திவரும் ஊரடங்கு மற்றும் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளின் தீவிர பரிசோதனை மூலம் நோய்த்தொற்று அதிகரிக்கும் வேகம் குறைந்திருந்தாலும், நோய்த்தொற்று அதிகரிப்பதால் மக்களைக் காக்க தற்போதுள்ள ஊரடங்கு நடைமுறையை மேலும் தொடர வேண்டிய நிலையில் அரசு உள்ளது. இதனால் நோய்ப்பரவலை கட்டுப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும். எனவே, பொது மக்கள் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இருமல், சளிக்கு சித்த மருத்துவம்

அதிமதுரம்	–	ஒரு பங்கு
அரத்தை	–	ஒரு பங்கு
திப்பிலி	–	ஒரு பங்கு
தாளீசம்	–	ஒரு பங்கு
பனங்கற்கண்டு	–	2 பங்கு

முதல் நான்கையும் வாணலியில் வறுத்து, எடுத்துக் கொண்டு பனங்கற்கண்டையும், சேர்த்துப் பொடித்து பாட்டிலில் காற்று புகாமல் போட்டு வைத்துக் கொள்ளுங்கள். இருமல், சளி வரும்போது அரை ஸ்பூன் தேனில் குழைத்து சாப்பிடுங்கள். மூன்றே நாளில் முழுமையான குணம் உறுதி.

தொல்லியல் துறை சார்பில் கீழடியில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட அகழ்வைப்பகம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொல்லியல் துறை சார்பில் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடி அருகில் கொந்தகை கிராமத்தில், கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் சாலையில் மதுரைக்கு கிழக்கே 13 கி.மீ. தொலைவில் வைகை ஆற்றின் தென்கரையில் கீழடி கிராமம் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள பள்ளிச்சந்தை திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் இந்திய தொல்லியல் துறை 2014–2015, 2015–2016, 2016–2017 ஆகிய மூன்று ஆண்டுகள் அகழாய்வு மேற்கொண்டது.

இச்சான்றுகளின் அடிப்படையில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை, கீழடியில் அகழாய்வினை மேற்கொள்ள மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியினைப் பெற்றது. 2017–2018ஆம் ஆண்டு நான்காம் கட்ட அகழாய்விற்கு தமிழ்நாடு அரசால் 55 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அகழாய்வு நெறிமுறைகளின்படி, 2017–2018ஆம் ஆண்டில் நான்காம் கட்ட தொல்லியல் அகழாய்வு தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டது. இந்த அகழாய்வில் 5,820 அரிய தொல்பொருட்களும், சங்ககாலம் சார்ந்த செங்கல் கட்டுமானப் பகுதிகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்திற்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

ஐந்தாம் கட்ட அகழாய்வு பணிகளுக்காக தமிழ்நாடு அரசால் 2018–2019ஆம் ஆண்டு 47 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள்

வெளிக்கொணரப்பட்டுள்ளன. மேலும், சுமார் 900 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆறாம் கட்ட அகழாய்வு பணிகளுக்காக 2019–2020ஆம் ஆண்டில், மத்தியத் தொல்லியல் ஆலோசனைக் குழுவின் அனுமதியைப் பெற்று, கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மணலூர், கொந்தகை மற்றும் அகரம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையால் ஆறாம் கட்ட தொல்லியல் அகழாய்வுப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 19.02.2020 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

அண்மைக்கால அகழாய்வுகளும், அறிவியல் முறையான காலக்கணிப்புகளும் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 15 இலட்சம் ஆண்டுகளாக மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதனை மெய்ப்பிக்கின்றன. தற்போது கீழடி ஆய்வுகள் கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் மக்கள் எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்று தெரிவிக்கிறது. மேலும், இந்தியாவில் கங்கைச் சமவெளி பகுதியில் கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் தோன்றிய இரண்டாம் நகரமயமாக்கம்

தமிழகத்தில் காணப்படவில்லை என்ற கருதுகோள் இதுவரை அறிஞர்களிடையே நிலவிவந்தது. ஆனால் கீழடி அகழாய்வு கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் நகரமயமாக்கம் உருவாகிவிட்டதை நமக்கு உணர்த்துகிறது.

மேற்கண்ட நிகழ்வுகளின் அடிப்படையில், 2013–2014ஆம் ஆண்டு முதல் ஆறு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவான தொல்லியல் அகழாய்வுகளின் மூலம் சுடுமண் உருவங்கள், மணிகள், செப்புக் காசுகள், இரும்புப் பொருட்கள், வட்டச்சில்லுகள், ஆட்டக்காய்கள், எலும்பு முனைகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள், தந்தத்தினாலான பொருட்கள், தமிழி எழுத்துப்பொறிப்பு கொண்ட பானை ஓடுகள், குறியீடுகள் போன்ற ஏறத்தாழ 14,535 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கீழடியில் உள்ள மிகப் பெரிய தொல்லியல் மேட்டில் நடைபெற்ற மற்றும் நடைபெறுகின்ற அகழாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கட்டுமான அமைப்பானது, இங்கு நகர நாகரிகம் சிறப்புற்று இருந்ததையும், அக்கால பண்பாட்டு வளர்ச்சியினையும் நம் கண் முன்னே காட்டுகிறது.

எனவே, தென்னிந்தியாவில் நிலவிய சங்க கால பண்பாட்டு வரலாற்று ஆய்வில் ஒரு திருப்புமுனைக்கு வித்திட்ட 2,600 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழர் பண்பாடு மற்றும் நகர நாகரிகத்தினை வெளிச்சமிட்டு காட்டியுள்ள கீழடி அகழாய்வுகளின் மூலம் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களைக் கொண்டு, அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்தினை வருங்கால தலைமுறையினர், மாணவ மாணவியர், அறிஞர்கள், தொல்லியல் வல்லுநர்கள் மற்றும் அயல்நாட்டு வல்லுநர்கள் அறியும் வகையில் அமைப்பது இன்றியமையதாகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கொந்தகை உள்வட்டம், கீழடிக்கு அருகே கொந்தகை கிராமத்தில் 0.81.0 எக்டேர் நிலப்பரப்பில் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட அமைக்கப்படவுள்ள உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

கீழடியில் உலகத்தரம் வாய்ந்த நவீன வசதிகளுடன் கூடிய அகழ்வைப்பகம் அமைக்கும் பணியானது தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையின் புராதன கட்டடங்கள் பாதுகாப்புப் பிரிவு (Heritage Wing) மூலமாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1970 முதல்...

50 ஆண்டுகளாக படிக்கவும்,பாதுகாக்கவும்,
பயன்பெறவும் தனது அயரா பணிகளைச்
செய்து வருகிறது

அரசின்
ஆக்கப்பணிகளை
அழகுறக்
காட்டிடும்
கேடயம் !

தமிழரசு

தமிழ்நாடு அரசின் சாதனைகளுக்கு
சான்று தரும் பட்டயம் !

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

50

செய்தி - மக்கள் தொடர்புத்துறை

தமிழரசு

1970-2020

பொன்விழா ஆண்டு

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS